இதழ்-43

16.02.2022



# தூமி

பல்சுவை மின்னிதழ்

## பெருவெள்ளத்திற்கான பயணம்

# மெய்ப்பொருள் காண்பதே அறிவு




சமூகவலைத்தளம் ஊடகப் பரப்பாக வளர்ச்சி பெற்றுள்ள பின்னணியில் செய்திகளை இலகுவாக மற்றும் துரிதமாக பெறக் கூடியதாக உள்ளது. எனினும் சமூகவலைத்தள பாவனையாளர்கள் அனைவருமே ஊடகவியலாளர்களாக காணப்படு கின்றமையால் செய்தியின் மீதான நம்பத்தன்மை முழுமையாக கேள்வி க்குட்படுத்தப்படுகிறது.

இவ்வாறான களத்திலேயே கடந்தவாரம் வன்னி நிலப்பரப்பில் தொழில்புரியும் பெண் மருத்துவர் மீதான அச்சுறுத்தல் என்பது சமூகவலைத்தளத்தினூடாக பெரும் பூதாகாரமாகியது. பாராளுமன்றம் வரை பேசு பொருளாக்க கூடிய சூழலை உருவாக்கியது. சமூக வலைத்தளத்தில் உருவாக்கப்பட்ட செய்தி ஒரு வார காலத்தினுள்ளேயே முழு ஊடகங்களையும் நிரப்பி இருந்தது. ஊடகங்களும் அதிகம் பிரதியிடலாகவே கடந்து சென்றுள்ளது.

அதேநேரம் குறித்த மருத்துவர் தொழில் புரியும் பிரதேசத்தில் பாடசாலையொன்றில் கண் பரிசோதனை சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதில் பாரியளவில் மோசடி இடம்பெற்றுள்ளதாக செய்தித் தாளொன்று புலன்விசாரணை கட்டுரை வெளியிட்டுள்ளது.

இச்செய்தியின் பின்பே பலரும் மெய்ப்பொருளை தேட முற்பட்டார்கள். பொதுவெளியில் பகிரப்பட்ட பெண் வைத்தியரின் தொலைபேசிக் குரல்களில் உள்ள முரண் நகைகளை தேடிக் கண்டறிந்தார்கள். ஒருவாரங்கள் முன் Stand with Hashtag(#) போட்டவர்களெல்லாம் வசை பாட தொடங்கினார்கள். சிலர் அமைதி கொண்டார்கள். எனினும் இங்கு இன்னும் மெய்ப்பொருள் அறியப்படவில்லை என்பதுவே நிதர்சனம்.

சமூகத்தின் பலவீனமான அம்சங்களை கொண்டு பலரும் தம் பிழைகளை மூடி மறைத்து செல்லவே முயற்சி செய்கிறார்கள். அதற்கான களங்களையும் நாமே திறந்து விடுகிறோம். எதிலும் யாவற்றிலும்

***‘மெய்ப்பொருள் காண்பதே அறிவு.’***



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா


**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்தவை...

04 கொம்யூனிசம் சொல்லித்தரும் அணில்
07 சிங்ககிரித்தலைவன்
11 மகோன்னதமிக்க மாசிமகம்
18 அணுசக்திப் பார்வையில்
22 குறுக்கெழுத்துப்போட்டி
23 ஈழச்சூழலியல்
27 நேரு பரம்பரையும் இந்திய அரசியலும்
29 சித்திராங்கதா
33 முன்பள்ளி மாணவர்களின் மொழித்தேட்டம்
36 ஏற்றமா ஏமாற்றமா ஏலம்?

**பன்னாட்டுத் தாய்மொழி நாள்**
**(International Mother Language Day)**
**பெப்ரவரி 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. தாய் மொழியை பேசுகின்ற, எழுதுகின்ற, அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்ற அனைவருக்கும் நிறைவான வாழ்த்துக்கள்....**

# கொம்யூனிசம் சொல்லித்தரும் அணில்

இந்த உலகம் உனக்கானது. ஆம். இந்த உலகம் உங்களுக்கானது. இங்கே நீங்கள் விரும்பியபடி வாழலாம். சந்தோஷமாக, நிம்மதியாக வாழ முடியும்.

ஏன்? முயற்சித்து போராடி வெறித்தனமாக சாதிக்கவும் முடியும்.




ஆனால் ஒன்றை மறக்கிறீர்கள். உங்களைப் போலவே இந்த உலகம் எல்லாருக்குமானது.

சூரியனையும் சந்திரனையும் அனைவரும் பகிர்ந்து கொள்வது போலவே மனிதர்கள் அனைவரும் இந்த உலகின் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளத்தான் வேண்டும். எல்லோருக்கும் ஒரே மதிப்புத்தான் இருக்கிறது. அனைவருக்கும் அனைத்திலும் உரிமையும் இருக்கிறது.

பூமி தோன்றி இத்தனை ஆண்டு கால பயணத்தில் “இது என்னுடையது” என்று முதன்முதலில் கூறிய மனிதனே உலகின் முதலாவது குற்றவாளி என்கிறது கொம்யூனிச வாதம்.

பூமியில் இன்பம் தரக்கூடிய அல்லது துன்பம் தரக்கூடிய எந்தப்பொருளும் யாரோ ஒருவருக்கு மட்டும் சொந்தமானது கிடையாது. தன் சக இனத்திற்கும் அதனை அனுபவிக்கும் எல்லா உரிமைகளும் உண்டு என்பதை மிருகங்கள் கூட புரிந்து வைத்துள்ளன.

ஆனால் இந்த கேடு கெட்ட மனிதருக்குள் மட்டும் இன புரிதல் இல்லாமல் போனது ஏன் என்பதே மிக்பெரிய கேள்வி?

தன்னை போல் தானே மற்றவரும் என்ற சிந்தனை இல்லாததால் தான், ஒவ்வொரு நாளும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சொத்து அபகரிப்பு, ஏல சீட்டு மோசடி, கொடுக்கல் வாங்கல் மோசடி, நம்பிக்கை துரோகம், நன்றி மறத்தல், என பக்கம் பக்கமாய் ஊடகங்களில் செய்திகள் வரிந்து கட்டி நிற்கிறன.

நிலையில்லா உலகில் தனக்கு மட்டுமே சொந்தம் என்று தேடித் தேடிச் சேர்த்து கைகளில் கடைசியாய் எதையும் எடுத்துச் செல்ல இயலாமல் பல தலைமுறை மரணித்து மண்ணுக்குள் புதையுண்டும் கூட இந்த கேடுகெட்ட ஈனச்செயல்கள் மட்டும் இன்னும் நிற்கவில்லை.

மனிதர்களிற்கு பேசத் தெரிகிறது. தன் குற்றங்களை எல்லாம் நியாயங்களாக விளக்கத்தெரிகிறது. ஆனால் விலங்குகளுக்கு விளக்கத் தெரியாது. அதனால்த்தான் அவை அற உணர்வுகளை மதித்து அதன்பால் உந்தப்படுவதை அவற்றின் செயல்களைக் கொண்டு நாம் அனுமானிக்க முடியும்.

யோசித்துப் பாருங்கள். நம்மால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பேரழிவு பூமி முன்னெப்போதும் காணாதது. இது போதாதென்று அணு ஆயுதங்கள். முதலியவற்றின் பெயரால் சுரண்டல், சமத்துவத்தின் பெயரால் அடக்குமுறை, உலக மயமாக்கத்தின் கோரப் பசிக்கு இரையாகும் மூன்றாம் உலக வளங்கள்....

மனிதனின் அறவுணர்வுக்கு என்னாயிற்று? அது தர்க்க நியதிகளால் - சுருக்கமாக சொன்னால் அறிவால் - மிகைபலம் பெற்றிருக்கிறது. நியாயப்படுத்துவதன் மூலம் எதையும் நிகழ்த்திக் காட்டக் கூடியவனாக மனிதன் இருக்கிறான். அறிவு, மனிதனின் அறவுணர்வின் கேடாக இருக்கிறது.

ஆனால் தன்னை நியாயப்படுத்திக் கொள்ள தெரியாத விலங்குகள் நியாயமாகவே நடந்து கொள்கின்றன. இந்த பூமியை அவை எல்லாவற்றுடனும் பங்கிட்டுக்கொள்கின்றன.

அட்டையில் அதற்கொரு சாட்சி தெரிகிறதே. பாருங்கள்! இந்தப் பழத்தை உண்டது ஒரு மனிதர் என்று கூறினால் நம்புவீர்களா? யாருமே மாட்டார்கள்தான்!

உண்மையும் அது தான். ஆனால் நாம் ஏன் நம்ப மறுத்தோம்?

ஒரு மனிதன் இதனை இவ்வாறு உண்பதற்கு சாத்தியமே இல்லையா? இல்லை!

மனிதனின் பற்கோலம் வித்தியாச மானது என்பதைத்தாண்டியும் இதை மனிதன் செய்யவில்லை என்பதற்கு வேறு நிரூபனங்கள் உள்ளனவா?

மனிதன் பழம் இனிமையாக இருந்தால் முழுவதுமாய் உண்டிருப்பான்.

இனிமையில்லையாயின் கடித்துத் துப்பியிருப்பான்.

ஆனால் இதை உண்மையிலே உண்ட அணில் எப்படிப்பட்டது பாருங்கள்!

இவ்வளவு இனிமையாக இருக்கும் கொய்யாக்கனியை தன் பற்களால் துளைத்தே வெளியே வர முடிந்த அணிலால் மனிதர்களைப் போல இதன் இனிமையை முழுவதுமாய் அனுபவிக்கும் எண்ணம் இல்லாமல் போனதேன்?

எதிர்பார்ப்புகள் ஏதுமற்ற அணிலுக்கான அன்றாட ஜீவிதம் அவ்வளவு இலகுவானதல்ல என்பது நாமறிவோம். இருந்தும் தன் அயல் பறவையின் பசியுணர்ந்து தான் புசித்த கொய்யாவில் மீதம் வைத்து விட்டுப் போகிற அணிலுக்கு முன்னால் மனிதம் தோற்று வெகு நாளாயிற்று.

மற்றவருக்காக பாதியை மட்டுமே புசிக்கும் அணிலாகி ஜீவிதம் நகர்த்த மனிதனால் முடியுமா? சமத்துவத்தை மனிதனால் இந்தளவிற்கு சாதிக்க முடியுமா?

சிறு குழந்தைகளாக இருக்கும்போதே இதனை மனிதர்களிற்கு சொல்லித்தர முடியும் என்று கல்வி நம்புகிறது. அதனால்த்தான் இப்படியொரு பாடல் எங்கேயே கேட்ட ஞாபகம் உங்களிற்கு வரக்கூடும்.

“அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடிவா
கொய்யாமரம் ஏறிவா
குண்டுப்பழம் கொண்டுவா
பாதிப்பழம் உன்னிடம்
பாதிப்பழம் என்னிடம்
கூடிக்கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்.”

அணில் கடித்த பழம் ருசியாக இருக்கும் என்று ஒருவர் சொன்னால், பழம் கடித்த அணில் அதை விட ருசியாக இருக்கும் என்று இன்னொருவர் சொல்கிறார். இந்த இரு கோணங்களின் உலகத்தில்தான் மனிதர்கள் எப்போதும் இருக்கிறார்கள். சமத்துவமில்லாத வாழ்வு மனிதர்களில் மனிதம் இல்லாமல் போனதற்கு சாட்சியாகிறது.

ஆனாலும் என்ன, அவரவர் உலகம் அவரவர்க்கு என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் மனிதர்கள் தங்கள் நியாயங்களை வாதத்தில் காட்டாமல் செயலால் காட்டினால் விலங்குகளும் இந்த உலகில் மனிதர்களை மதிக்கத் தொடங்கியிருக்கும். அவைகளிற்கு மனிதனின் வாதம் புரியாது. வாழ்க்கை புரியும்.

தனக்கு எது நன்மை தரும் என்று ஒருவன் நினைக்கிறானோ? அதையே தனது சக மனிதருக்கும் அவன் நினைக்கட்டும்.

***மனிதனையும் கொஞ்ச விலங்காவது மதிக்கட்டும்.***




### குழப்பமும் தெளிவும்

சிந்தனையில் ஆழ்ந்திருந்த காசியப்பனுக்கு லீலாதேவி இன்னுமொரு விடயத்தை சுட்டிக்காட்டினாள் !

“அரசே... அதோ அந்தப் பாறைகளை சற்று அப்புறப்படுத்தச் சொல்லுங்கள்! இந்த மணல் திட்டை கிளறி அகற்றச் சொல்லுங்கள்”

“லீலா... இதையெல்லாமா... என்னிடம் சொல்வது? நீயே உத்தரவிடலாமே...”

என்றவன் தன் வீரர்களுக்குச் சைகை செய்தான்... உடனேவீரர்கள் மிகக் கவனமாக லீலாதேவி சுட்டிக்காட்டிய பாறைகளை அப்புறப்படுத்தி, அதன் அருகிலேஇருந்த மணல் திட்டையும் வெட்டத் தொடங்கினார்கள்! லீலாதேவி சந்தேகித்ததைப் போல அதற்குள் இருந்து ஒரு சிறிய நகப் பகுதி போன்ற அமைப்பு தென்பட்டது...

ஆம்! அது சிறிய நகம்தான்! மூன்று பெரிய நகங்கள் மேலதிகமாக அவற்றோடு இணைந்து ஒரு சிறிய நகம்! மறுகாலிலும் அப்படியே இருந்தது. காசியப்பன் லீலாதேவியின் கூர்மையான பார்வையின் திறத்தை தன்னுள்ளேவியந்து கொண்டான்!

“மன்னா... பாருங்கள் இவை சிங்கத்தின் நகங்கள் என்று இருக்க எப்படிச் சாத்தியமாகும்? மூன்றுபெரிய நகங்களும் ஒரு சிறிய நகமும் சிங்கங்களுக்கு இருப்பதில்லையே! உங்கள் கற்பனையில் உருவான இந்தச் சிகரம் பற்றிய எண்ணத்தை நான் மாற்றவில்லை என் எண்ணத்தையே உங்களுக்கு வெளிப்படுத்தினேன்! தவறு இருப்பின் மன்னித்தருளுங்கள்”

என்று தன் கரங்களைக் கூப்பிவணங்கிறின்றாள் லீலாதேவி!

“இதில் தவறேதும் இல்லைத் தேவி சரியான நேரத்தில் எனக்கு நீ இதைச் சுட்டிக்காட்டினாய்! உன் புத்திக்கூர்மையை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன்! பெண்கள் எவ்வளவு நுண்ணிய அறிவுபெற்றவர்கள் என்பதை உன் மூலமாக உணர்கின்றேன்!. இதனால் தான் ஆதியில் இந்த இலங்கைத்தீவின் தலைமைப் பொறுப்பு கூட பெண்ணிடம் இருந்திருக்கிறது.”

என்று லீலா தேவியின் தோள்களை அணைத்தவாறு புகழ் மாலை சூட்டினான் காசியப்பன்.

சிங்கம் ஒன்று படுத்திருப்பதைப் போல தூரப் பார்வையில் தோற்றம் அளித்தாலும் கூட இந்தச்சிகரத்தின் கால்களை ஏன் இப்படி அமைக்க வேண்டும்? என்ற கேள்வி காசியப்பனின் மனதைக்குடைய ஆரம்பித்திருந்தது!

ஒரு வேளை மீகாரனை ஆற்றங்கரையில் எச்சரித்த துறவியை கண்டறிந்து அவரிடம் விசாரித்தால் இதன் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளலாம் என்ற எண்ணமும் அவனுக்குள்ளே எழுந்தது! உடனடியாக மீகாரனுக்கு செய்தி அனுப்பி வைக்க ஆணையிட்டான். துறவியின் அடையாளங்களை நேரில் வந்து சொல்லுமாறு அந்தச் செய்தியில் குறிப்பிட்டு செய்தி காவியிடம் ஓலையைக் கொடுத்து அனுப்பினான்! பாறைகள் புரட்டப்பட்ட பின்னர் வெளித்தெரிந்த, ஒருங்கிய வாசல் வழியே ஓரளவு தூரம் மேலே ஏறமுடிந்தாலும் அதற்கு மேல் பாதையோ, படி வரிசையோ எதுவும் இல்லை.... பணியில் ஈடுபட்டிருந்த வீரர்களும் வெகுவாகக் களைத்துப் போய் இருந்தனர்.

யானைகளுக்கு நீர் காட்டுமாறு காசியப்பன் உத்தரவிட்ட பின்னர், அருகில் அமைத்திருந்த கூடாரத்தினுள் லீலா தேவியுடன் சென்று அமர்ந்தவன் கடுமையான சிந்தனையில் ஆழ்ந்துபோனான்!

காசியப்பனின் நிலை லீலாதேவியை கவலை கொள்ளச் செய்திருந்தது. மெல்ல அவன் அருகினில்போனவள், அவளின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்! அந்த மென்மையான தீண்டுதல், எந்த அளவுக்கு மரத்துப்போன காசியப்பனின் கைகளுக்கு உணர்வைக் கொடுத்திருக்கும் என்று தெரியவில்லை. நாம் அறியாமலேயே வண்ணாத்துப்பூச்சி ஒன்று எம் தோள்களில் வந்து அமர்ந்துபோகுமல்லவா... அப்படி இருந்திருக்க வேண்டும்...

தன் தலையை அவன் தோள்களுக்கு கீழாக லீலாதேவி சாய்த்த போதுதான் காசியப்பன் தன்னுணர்வு வரப் பெற்றான். மெல்ல அண்ணார்ந்து பார்த்த லீலாதேவி,

“நாதா குன்றம் குறித்த கேள்விகளால் நீங்கள் குழம்பிப் போயுள்ளதை

எண்ணிக் கவலைகொள்கின்றேன்! சிங்கமோ சிட்டுக்குருவியோ எம் மூதாதையர்களின் இந்தப் பிரமாண்டமான கட்டுமானத்தை இனி நீங்கள் உங்கள் விருப்பத்தைப் போல மாற்றி அமைக்க என்ன தடை உண்டு? கடந்த காலத்தின் தவடுகள் மீது நிகழ் காலத்தின் வண்ணங்களை உங்கள் விருப்பப்படி பூசுங்கள்! காலம் உங்களின் பெயரையே காற்றுள்ள அளவும் உச்சரிக்கும்! தேவையற்ற ஆராய்ச்சியும் யோசனையும் குழப்பத்தைத் தான் ஏற்படுத்தும். தெளிவு வேண்டும் என்றால் குழப்பத்தைக் கை விட்டு குன்றத்தின் மேல் ஏறும் வழிவகைகளை சிந்தியுங்கள்! என் அன்புக்குரியவர் இப்படி அசதியாக இருப்பது என்னை அணுவணுவாக கொல்கிறது!"

லீலாதேவியின் வார்த்தைகள் காசியப்பனுக்கு தற்காலிக நிம்மதியைக் கொடுத்தது. கடந்த காலத்தின் மர்ம முடிச்சுக்களை பற்றி கவலை கொள்ளாமல் அவற்றின் மீது நிகழ்கால வர்ணங்களைப் பூசி அழகுபடுத்தலாம் என்று ஆவல் அதிகம் கொண்டான் காசியப்பன்!

"லீலா... உன்வார்த்தைகளின் ஜதார்த்தத்தைப் புரிந்து கொள்கிறேன்! இந்தக் கால்கள் எந்த விலங்கினுடையது என்ற தேடல் எனக்குள் எப்போதும் இருக்கும். அதை ஏன் இந்தக் குன்றத்தில் அமைத்து வைத்தனர் என்ற கேள்வியும் எனக்குள் இருக்கும். ஆனால் அவை என்னைப் பாதிப்படையச் செய்யாது!"

லீலாதேவியின் முகத்தில் ஆனந்த ரேகை ஓடியது! இன்னும் இறுக்கமாகக் காசியப்பனை அணைத்துக் கொண்டாள்!

"இந்த அணைப்பு என்னை எங்கோ அழைத்துச் செல்கிறது... இந்தக் குன்றத்தின் மீது பறந்து போய்அமர்ந்து கொண்டதைப் போல உணர்கிறேன் லீலா... காதல் எமக்குச் சிறகுகளைக் கூடத்தருகிறது. பார்த்தாயா?"

"அப்படியாயின் இந்தச் சிகரத்தின் மீது பறந்து தான் போக வேண்டும் என்கிறீர்களா..? உண்மையிலேயே எம் முன்னோர்கள் பறந்து தான் மேலே போய் இருப்பார்களோ? இதன் உச்சியைப் பார்த்தீர்களா? அறுத்துப் போட்டதைப் போல தட்டையாக உள்ளது. பறந்து போனவர்கள் தரை தொட வசதியாய் உள்ளது போன்று என் உள்ளுணர்வு சொல்கின்றது!"

லீலாவின் இந்தவார்த்தைகள் காசியப்பனுக்கு நகைப்பை வரவைத்தது! சிரித்துக் கொண்டே அவளை அள்ளி எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டான்.

"தேவி மனிதர்கள் பறப்பது என்பது கற்பனை அல்லவா? காவியங்களில் வேண்டும் என்றால் நாம் பறக்கலாம் நிஜத்தில் எப்படி பறக்க முடியும்? புத்தரைப் போன்ற ஞான உயர்வு பெற்றவர்களாலும், சித்தர்களாலும் பறக்க முடியும் என்பது கூட வழி வழி வந்த கதைகளே அன்றி நாம் யாரும் நேரில்பார்க்காத ஒன்றுதானே... கண் பார்த்த ஆதாரம் இன்றி எதையும்

நம்புவதில்லை இந்தக் காசியப்பன்!”

“நாதா, யானைகள் நகர்ந்த போது பாதாளப் பொறி திறப்பதைப் போல வியத்தகு கட்டுமானத்தை அமைத்த எம் முன்னோர்கள் பறக்கும் கருவிகளை அமைத்திருக்க மாட்டார்கள் என்று எப்படிச் சொல்லலாம்? எம் முன்னோர்கள் எம்மை விட ஆற்றல் பெற்றவர்களாக இருந்திருக்க மாட்டவர்கள் என்று எப்படிச் சொல்லலாம்? இவை என் ஊகங்களே... அதிகமாகக் கதைத்திருந்தால் மன்னியுங்கள்”

“லீலா... வியப்புப்பும் திகைப்பும் தான் இந்தக் குன்றத்துக்கு வந்த நாட்களில் இருந்து என்னைச் சூழ்கிறது.”

என்றவன் கூடாரத்துக்கு வெளியிலே வந்தான். எங்கிருந்தோ காற்றில் பறந்து வந்த காசித்தும்பை விதை ஒன்று காற்றின் உந்துதலால் இன்னும் இன்னும் உயர்ந்து குன்றத்தை நோக்கிச் சென்று காசியப்பனின் பார்வையில் இருந்து மறைந்தது.

மீகாரனின் வரவையே காசியப்பன் அதிகம் எதிர்பார்த்தான். லீலாதேவியின் ஆழமான கருத்துக்கள் காசியப்பனின் சிந்தனைக்கு தீனி போட்டது.

தூரத்தில் நீர் அருந்தச் சென்றிருந்த யானைகள்மீண்டும் சிகரத்தின் அடிவாரத்தை நோக்கி ஆடி அசைந்து வந்து கொண்டிருந்தன... காசியப்பனின் முதுகுக்குப் பின்னால் லீலாதேவியின் ஸ்பரிசம் நெருங்கியது. கூடாரத்தின் திரைகள் மூடிக்கொண்டன. இருவரும் குன்றத்தை விட உயரமாகப் பறக்கத் தயாராகிக் கொண்டிருந்தனர்...

தொடரும்...

## செய்தித் துளிகள்



● அமெரிக்காவில் முதல் முறையாக சாலை ஒன்றுக்கு திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் **வள்ளுவர் வே** எனவும் தமிழில் **வள்ளுவர் தெரு** எனவும் இந்த தெரு அழைக்கப்படவுள்ளது.

● நடத்தப்பட்ட ஆய்வொன்றில் தாய்மார்கள் கர்ப்பகாலத்தின் போது அதிகளவில் பச்சை காய்கறி எடுத்துக்கொண்டால் பிரசவத்துக்கு பின், குழந்தையும் காய்கறியை விரும்பி சாப்பிடும் என அமெரிக்கா, பிரான்ஸ் விஞ்ஞானிகள் ஆய்வில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதே போல பிரசவத்துக்கு பின்பும் தாய்மார்கள் காய்கறி சேர்த்துக்கொள்வதை நிறுத்தக்கூடாது.

திருச்சிற்றம்பலம்

# மகோன்னதமிக்க மாசிமகத் திருநாள்

**தி. மனோஷன்**

வேதாகம சாஸ்திரங்களின்படி பாரத சமயங்கள் பின்பற்றும் பன்னிரு சூரியமான மாதக் கணக்கின்படி பதினொராவது மாதமாகவும், மாக மாதம் என்று சாஸ்திரங்கள் விளிக்கும் மாதமாகவும் இருப்பது மாசி மாதம் ஆகும். பல்வேறு ஆன்மீக மற்றும் விஞ்ஞான தத்துவங்களை தன்னகத்தே கொண்டுள்ளது இம்மாதம். புவிசார்பான சூரியனின் இயக்கத்தின்படி சூரியனானது ராசிமண்டலத்தின் பதினொராவது ராசியான கும்ப ராசியில் பிரவேசத்து சஞ்சரிக்கும் இருபத்தொன்பது நாட்கள் நாற்பத்தெட்டு நாடிகள் மற்றும் இருபத்துநான்கு விநாடிகள் கொண்ட காலப்பகுதியே மாசிமாதம் ஆகும்.

மாசி மாத பௌர்ணமித் திதி நாளானது சிம்ம ராசியின் (மாசிமகம்) ஆதிக்கம் பெற்றிருக்கும் நாளும் கூட. இத்தினத்தில் முன்பு சிவத்துடன் சக்தி இணைந்து சிவசக்தியாக ஐக்கியமானர். கணவன் மனைவி ஒற்றுமைக்கு உதாரணமாக இந்த ஐக்கியம் இருப்பதால் சைவ-வைணவப் பெண்கள் தம் மாங்கல்ய பாக்கியத்தை வலுப்படுத்த தாலிக் கயிற்றை புதிதாக மாற்றிக் கொள்ளவர். இதனையொட்டி மாசிக் கயிறு “மாங்கலிய பாக்கியம் தரும்.” என்ற முதுமொழி உருவானது. மேலும், அகிலத்தின் அம்மையப்பர் மாசிமக நன்னாளில் இணைந்ததால், மானிடர்கள் தம் தாய்-தந்தையருக்கு தர்ப்பணம் வழங்கி பிதிர்க்கடனும் நிறைவேற்றிக் கொள்வர்.

அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போலுள்ளது சிவவிரதங்களுள் தலையாயதான சிவராத்திரி விரதமும் மாசி மாதத்திலேயே அனுட்டிக்கப்படுகின்றமை ஆகும். இத்துணை சிறப்புமிக்க மாசி மாதத்தில் பௌர்ணமித் திதியுடன் மக நட்சத்திரம் கூடவரும் காலம்



மாசிமகம் என்று வழங்கப்படுகின்றது. மாசிமகம் என்றால் அடியவர் நினைவில் வருவது தீர்த்தவாரி தான். அதிலும் குறிப்பாக தக்ஷிண பாரதத்தின் குடந்தை/ குடமூக்கு என்று வழங்கப்படுகின்ற கும்பகோணத் திருத்தலத்தின் மாசிமகத் தீர்த்தக் குளத்தில் வெகுவிமரிசையாக நடந்தேறும் மாசிமக மகா தீர்த்தவாரி உற்சவமானது அடியார் மனதில் நீங்காத உற்சவமாகும்.

இத்துணை சிறப்புமிக்க இக்கும்பகோணத் திருத்தலத்தின் வரலாறானது புராணங்களின்படி மிகவும் சுவாரசியமானது. முன்னொருக்கால் தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்த போது காத்தற் கடவுளாகிய விஷ்ணுவின் ரூபமாக அமிர்தகலசத்துடன் தன்வந்திரி மூர்த்தி உருவானார். அப்போது, தன்வந்திரியின் கரங்களால் தாங்கப் பெற்றிருந்த அமுத கலசத்துக்காய் தேவரும் அசுரரும் சண்டையிட்டனர். இதுகண்டு விஷ்ணுவானவர் அமிர்தத்தைக் காக்க கருடனை ஏவினார். கருடனும் தன்வந்திரியிடமிருந்து அக்கலசத்தைப் பெற்று



வானிற்றாவினார். கருடனைத் தொடர்ந்த அசுரரும் தேவரும் கலசத்துக்காக சண்டையிட கலசத்தின் வாய்ப்பகுதி சிதிலமடைந்து உள்ளிருந்த அமிர்தமானது புண்ணிய பூமியான பாரத ஷேத்திரத்தின் ஆங்காங்கே சிதறிற்று. இங்ஙனம் அமிர்தமானது தக்ஷிண பாரதத்தில் விழுந்த புண்ணியத் தலமே இன்றைய கும்கோணம் ஆகும்.

இவ்வாறு புராணச் சீர்பெற்ற பாஸ்கர ஷேத்திரம் என்று வழங்கப்படும் கும்பகோணத்தின் மூர்த்தியாக மங்களநாயகி சமேத ஆதிகும்பேஸ்வரர் இலங்குகின்றார். இத்தலத்தின் சிறப்பை அப்பர் பெருமானார்

“குடமூக்கே குடமூக்கே என்பீராகில் கொடுவினைகள் தீரும்”

என்று உரைக்கின்றார். அதாவது, இத்தலப்பெயரைச் செப்பினாலேயே பாவவினையறுந்து முத்தியின்பம் கிடைக்கும் என்பது திண்ணம் என்றுரைக்கின்றார். மேலும், பிறதலங்களில் இயற்றும் பாவங்களை மோட்ஷ த்வாரபுரமான காசியில் தீர்க்கலாம், ஆனால் அக்காசியில் இயற்றும் பாவங்கள் தீரும் ஒரே தலம் கும்பகோணம் என்பது புராணமுடிவு.

கும்பகோணத் திருத்தலத்தில் மாசிமகம் சிறப்புறக் காரணம் பிரளயமே ஆகும். ஊழிக்காலம் நெருங்குவதை ஞானத்தால் உணர்ந்த பிரம தேவன், உயிர்கள் அனைத்தும் பிரளயகாலத்திற்பின்

எங்ஙனம் மீள்த்தோன்றும் என முறையிட்டார். பிரம்மனின் வருத்தம் நீங்கவும், உயிர்ச்சக்கரம் ஒழுங்காகச் சுழலவும் தீர்வு செப்பினார் பரமன். அமிர்தம் நிரம்பியதோர் கடத்தில், புண்ணிய ஷேத்திரங்களின் மண் மற்றும் ஜீவராசிகள் சகலதினதும் ஜீவவித்துகளை இட்டு மேருமலைச் சிகரத்தில் வைத்து வில்வங்கொண்டு பூஜித்து விட்டுவிடும்படியும், ஊழிவெள்ளம் முடிந்த பிற்பாடு அக்கலசம் கரைதட்டுங்கால் தான் ஆவன செய்வதாயும் திருவாய் மலர்ந்தருளினார் பரமன்.

அங்ஙனமே, ஊழி நெருங்கும் போது பிரமனும் கலசத்தை சாஸ்திர விதிப்படி தயாரித்து மங்கலப் பொருட்களாலும் வேதாகமங்கள் கொண்டும் அலங்கரித்து மேருமலைச் சிகரத்தில் வைத்து வில்வார்ச்சனை புரிந்து விட்டுச் சென்றார். பிரளய காலத்தின் போது சகல வஸ்துகளும் அழிய மிகுந்த உயரத்திலிருந்த ஜீவாமிர்தக் கலசம் வெள்ளத்தில் புரண்டோடி கும்பகோணத்தில் கரைதட்டி நிலைகொண்டது. ஊழிவெள்ளம் வழிந்தோடிய பின்னர் மகேஸ்வரன் இதுவே தக்கசமயம் என்றுணர்ந்து வேட்டுவக் கோலம்பூண்டு பாணபுரேசம் என்ற திருத்தலத்தில் நின்றபடி வில்லில் நாணேற்றி ஜீவாமிர்தக் கலசத்தை குறிவைத்து அம்பெய்தார். சிவாஸ்திரம் பட்டுடைந்த அமுதக் குடத்திலிருந்து எட்டுத்திக்கிலும் அமிர்தம் வழிந்தோடியது. அமிர்தக் குடம் உடைந்து அமிர்தம் சிந்திய இடம் என்பதால் குடந்தை எனவும், அமிர்த கலசத்தின் மூலையில் கோணலாகி அமிர்தம் சிந்திய இடம் என்பதால் கும்பகோணம் என்றும் தலத்துக்கு பெயர் உண்டாயிற்று.

இவ்வாறு சிவபெருமானால் உடைக்கப்பட்ட கலசத்தினைத் தாங்கிய உறி சோமேஸ்வரம் என்ற இடத்திலும், கும்பத்தின் தேங்காய் அபிமுகேஸ்வரம் என்ற இடத்திலும், கும்பத்தைச் சுற்றியிருந்த புரிநூல் கௌதமேஸ்வரம் எனுந்தலத்திலும், பிரமன் கலசத்தை அர்ச்சித்திருந்த வில்வபத்திரம் நாகேஸ்வரம் எனும்பதியிலும், குடத்தின் வாய்ப்பகுதியானது குடவாயில் என்ற இடத்திலும் விழுந்து சிவலிங்கங்களாக காட்சி தந்தருளின. இத்தலங்கள் இன்று பெருஞ்சிவாலயங்களாக உருப்பெற்றுள்ளது.

அமுதமானது கும்பகோணத்திலிருந்து அட்டதிக்குகளுக்கும் வழிந் தோடி திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், தாராசுரம், சுவாமிமலை, திருப்பாடலி வனம் ஆகிய திருத்தலங்களை செழுமைப்படுத்தியது. இறுதியில், அமிர்தத்தை தாங்கிய கலசம் கும்பகோணத்தில் கரைதட்டி நிலை கொண்டது. சிவானுக்கரஹத்தால்



உடைக்கப்பட்ட கலசமானது இறுதியில் ஆதிகும்ப லிங்கமாக மாறி நின்றது.

இவ்வாறு அமிர்தக் கடம் உடைந்து, உயிர்ச் சக்கரம் மீளுருவாக அனுக்கிரஹம் புரிந்த பரமசிவனைப் பலவாறாகத் தொழுதேத்தி, சிருஷ்டியை மீளத்தொடங்க அனுமதி கேட்டார் பிரம தேவன். சிவப்பரம்பொருளும் சம்மதந் தந்தருளிட, மாசி மாத பூர்வ பக்ஷ அஸ்வதி நட்சத்திர தினத்தில் கும்பகோணத்தின் ஆதிகும்பேஸ்வர மூர்த்திக்கும் இறைவிக்கும் துஜாரோகணம் செய்வித்து பத்து நாட்கள் மகா பிரம்மோற்சவம் நடாத்தினார். இவ்வாறு நிகழ்த்திய பிரம்மோற்சவத்தில் ஒன்பதாம் நாள் பஞ்சமூர்த்திகளை ஐந்து ரதங்களில் எழுந்தருளச் செய்வித்து பஞ்சரத பவனியையும், பத்தாந்தினம் மாசிமக நன்னாளில் மாசிமகத் திருக்குளத்தில் தீர்த்தோற்சவமும் செய்தும் தனது சிருஷ்டித் தொழிலை இனிதே தொடங்கினார்.

இதனடிப்படையிலேயே கும்பகோணத் திருத்தலத்தில் மாசிமக மகோற்சவம் வருடாவருடம் நிகழத்தப்படுகின்றது. இந்த மாசிமக பிரம்மோற்சவத்தில் மகுடோற்சவமாகத் திகழ்வது மாசிமக



நன்னாளன்று மாசிமகக் குளத்தில் நிகழும் மகாதீர்த்தோற்சவமாகும். மாசிமகக் குளமானது ஐந்து ஏக்கர் பரப்புடையதாகும். இத்திருக்குளத்துள்ளே வாயு, கங்கா, பிரம்ம, ஜமுனா, குபேர, கோதாவரி, ஈஸான, நர்மதா, ஸரஸ்வதி, இந்திர, அக்னி, காவேரி, குமரி, நிருதி, பயோஹிணி, வருண, ஸரயு மற்றும் கன்யா முதலிய இருபது புனித தீர்த்தக் கிணறுகள் உள்ளன. இப்பெருந்திருக்குளத்தைச் சூழ பதினாறு மண்டபங்களும், ஒவ்வொரு மண்டபத்திலும் தலா ஒவ்வொரு சிவலிங்கங்களுமாக குளத்தைச் சூழ பதினாறு சிவலிங்கங்கள் அமையப் பெற்றுள்ளன. இவை ஒருங்கே ஷோடஸ மஹாலிங்கங்கள் என்று வழங்கப்படுகின்றன.

மாசிமகத்தன்று சமுத்திரம் அல்லது புனித தீர்த்தக் குளத்தில் நீராடுவதும், பித்ரு தர்ப்பணமும் உசிதமானது என்று ஏலவே கூறப்பட்டதற்கியைபாக, ஏராளமான சிவனடியார்கள் இத்திருக்குளத்தில் மாசிமக நன்னாளில் நீராடி, குளத்தைச் சூழவுள்ள பதினாறு மண்டபங்களில் பித்ரு காரியம் இயற்றி, அதற்குதவிய அந்தணருக்கு தானமும் வழங்குவார்கள். தானங்கள் பதினாறு ஆகும். அவ்வெண்ணிக்கையை வலியுறுத்தவே திருக்குளத்தைச் சூழ பதினாறு மண்டபங்கள் அமைக்கப்பட்டு, சிவலிங்கங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விதிப்படி இத்திருக்குளத்தில் நீராடி, பிதிர் தர்ப்பணம் செய்து தானம் வழங்கி ஷோடஸ மஹாலிங்க தரிசனமும் இயற்றினால் பரப்ரம்மமான

சிவபெருமானின் திருக்கழலடைந்து பிறவாப் பேரின்பம் பெற்றுய்யலாம்.

மாசிமகத்தில் கும்பகோணத்து தீர்த்தவாரி உற்சவம் பிரசித்தமோ அங்ஙனமே சமுத்திர தீர்த்தவாரியும் பிரசித்தம். ஒருக்கால் மழைக் கடவுளான வருண பகவான் இருள் மலிந்த நேரத்தில் வந்து கொண்டிருந்த தன் குருவை, அவர் குரு என்று அறியாமலும், தன் எதிரி என்று எண்ணியும் கொன்றுவிட்டார். அறியாது செய்தாலும் குருவைக் கொன்ற பாவம் பிரம்மஹத்தி உருவில் வருணனைப் பீடித்தது. இதன் விளைவால் வருணன் சமுத்திரத்தின் அடியில் கட்டுண்டவனாய், பெருத்த அவதியுற்று, தன் கடமையியற்ற இயலாதவனாய்க் கிடந்தான். இதனால் பூவுலகில் மழை பொய்த்தது. மழையின்றி பயிர்களும் உயிர்களும் வாடின. உயிர்கள் அல்லறுவதைக் கண்டு பொறுக்கவியலாத இந்திராதி தேவர்கள் பரமசிவனிடம் முறையிட்டு, வருணனை விடுவிக்க வேண்டினர். இதற்கு செவிசாய்த்த எம்மெருமானும் பிரம்மஹத்தியின்று வருணனை விடுவித்து அருளி, உயிர்கள் உய்ய வழிசமைத்தார். இவ்வாறு வருணன்



சமுத்திரத்திலிருந்த விடப்பட்டது ஓர் மாசிமக நன்னாளாகும். இவ்வாறு விடுபட்ட வருணன் ஈசனைப் பலவாறாகப் புகழ்ந்தேத்தி ஓர் வரமும் வேண்டினான். அதாவது, தான் சிவனருளால் சமுத்திரத்திலிருந்து விடுபட்டு, பிரம்மஹத்தி தன்னை நீங்கிய இப்புண்ணிய மாசிமக நன்னாளில் எவர் சமுத்திரத்தில் முறைப்படி நீராடி சிவவழிபாடு இயற்றுகின்றனரோ அவர்களுக்கு பாவம் விலக்கி அருள வேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டான். வருணன் கேட்ட வரத்தை அருள்வதாக திருவாய் மலர்ந்தருளினார் எம்பெருமானார். ஆகவே, எவனொருவன் மாசிமகத்தில் சமுத்திரத்தில் நீராடுகின்றானோ அவன்தம் பாவம் விலகும் என்பது திண்ணம்.

மாசிமக மகோற்சவமனது கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரத்தில் பிரம்மோற்சவமாயும் (பிரமதேவன் தொடக்கிய உற்சவம்) மற்றைச் சிவாலயங்களில் மகோற்சவமாயும் கொண்டாடப்படுகின்றது. மதுரை மீனாட்சி அம்பாள் உடனாய சொக்கநாதர் ஆலயத்தில் மாசமகத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு ஒருமண்டலம் இவ்வுற்றசவம் நிகழ்கின்றது.

மேலும், திருமயிலாடுதுறை கற்பகாம்பாள் சமேத கபாலீஸ்வரர் திருக்கோயிலில் மாசிமக தினத்தன்று சமுத்திர தீர்த்தோற்சவம் தொன்றுதொட்டு அனுட்டிக்கப்பட்டு வருகின்றது என்பதை ஞானக்குழந்தை அருளிய

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய். "

என்ற திருப்பதிகம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

### மகாமகம்

அடியார் பாவங்களையும் புண்ணிய நதிகளான கங்கை, ஜமுனை, ஸரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி, கோதாவரி, சரயு மற்றும் தாமிரபரணி முதலிய நவதீர்த்தங்களும் அடியவரின் பாவங்களை ஏற்றுச் சுமந்து மிக்கவலிமை குன்றியோராயினர். இதனால், பெற்ற பாவங்களை தொலைக்க வழிகோலி பரமசிவனை நோக்கித் தவமியற்றினர். அவர்தம் தவத்தால் மகிழ்ந்த எம்பெருமானும் நவதீர்த்தங்களின் முன் பிரசன்னமானார். இறைவனைப் பலவாறாக அர்ச்சித்த நவநதிகளும் தம்குறையை முறையிட பரமேசனும் வழி நல்கினார்.

புவிசார்பாக குரு (வியாழன் கிரகம், கிரகம் என்பது பூவுலகத்தின் இயக்கத்தில் தாக்கஞ்செலுத்தும் விண்பொருட்கள்) சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் மாசி மாதத்தின் மக நட்சத்திரம் உள்ள நன்னாளில் கும்பகோணத் திருத்தலத்தின் அக்னி திக்கிலுள்ள திருக்குளத்தில் நீராடி பாவங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கிணங்க நவதீர்த்தங்களும் ஈசன் குறித்த அத்தினத்தில் நீராடி தம்பாவங்களைந்து பழைய பொலிவு பெற்று, மானிடர்க்கு மீண்டும் சேவை செய்யலாகினர்.

இவ்வாறு, குரு பகவான் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு வருடம் சஞ்சரிக்கும். இவ்வாறு சிம்ம ராசியில் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறையே நுழைந்து சஞ்சரிக்கும். ஆதலால் இத்திருநாள் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையே வரும். இத்தினத்தில் கும்பகோணத்தின் மாசிமகக் குளத்தில் நீராடினால் நவநதிகளிலும் நீராடிய பலனைப் பெற்று பாவங்களைக் களையலாம் சிவானுக்கிரகமும் இனிதே கிடைக்கப்பெறும். இது சத்தியம்.

இவ்வாறு பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை வரும் இந்த மாசிமகத்தை மகாமகம் என்று சிலாகித்துக் கூறுவர். இருபத்தோராம் நூற்றாண்டில் 2004 ஆம் ஆண்டும், 2016 ஆம் ஆண்டும் மகாமக நன்னாள் வந்தது. அடுத்த மகாமகம் 2028 ஆம் ஆண்டுக்குரியதாகும்.
சிவபூமியாம் ஈழத்தில் மாசிமகத் திருவிழாவானது மாத்தளை மாநகரில் குடிகொண்டு அருளாட்சி



புரியும் முத்துமாரிம்மன் திருக் கோயிலில் பிரசித்தமானதாகும். இத்திருத்தலத்தில மாசிமகத்தன்று வெகுவிமரிசையாக தேர்த்திருவிழா நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. ஈழத்தில் மாசிமக சமுத்திர தீர்த்தவாரியனது குணதிசைத் திருத்தலமான மும்மலை சூழ் திருகோணமலையில் பிரசித்தமானது ஆகும். மகாமகமன்று திரு கோணமலையின் சகல திருக் கோயில்களிலிருந்தும் சுவாமி புறப்பட்டு சமுத்திரக் கரையடைந்து வெகுவிமரிசையாக தீர்த்தோற்சவம் நிகழ்த்தப்படும்.

சிவனருளைப் பெற்றிடவும், முன்னோர்களின் ஆசிகளைப் பெற்றிடவும் மாசிமக நன்னாளில் பிதிர்க் கடன் நிறைவேற்றி சிவ வழிபாடியற்றி பிறவாப் பேரின்பம் பெற்றிடுவீர்.

**திருச்சிற்றம்பலம்**

**‘மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்’**

## நேரம் தின்னும் தொலைபேசிகள்

நாளொன்றில் சராசரியாக 4 மணித்தியாலங்கள் 48 நிமிடங்களை மக்கள் தமது கையடக்க தொலைபேசியில் செலவிடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இது 2019 ஆம் ஆண்டை விட 30% அதிகம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. App Annie எனப்படும் செயலி கண்காணிப்பு நிறுவனத்தை (App monitoring firm) மேற்கோள்காட்டி இந்த தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் பிரித்தானிய ஒழுங்குபடுத்துநரான Ofcom இதேயளவான நேரத்தையே மக்கள் செலவிடுவதாக தெரிவித்திருந்தது. இருப்பினும், அதன் ஆய்வுகளில் தொலைக்காட்சி பார்ப்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் 230 பில்லியன் தடவைகள் தொலைபேசி செயலிகள் தரவிறக்கப்பட்டுள்ளதாகவும் 170 பில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளதாகவும் App Annie நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் அதிக தடவைகள் தரவிறக்கம் செய்யப்பட்ட செயலியாக TikTok அமைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 90 வீதத்திற்கும் அதிகமான நேரத்தை பாவனையாளர்கள் TikTok-இல் செலவிட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இரண்டாம் பாதியில், TikTok-இல் மாதாந்தம் செயற்பாட்டில் உள்ள பயனர்களின் எண்ணிக்கை 1.5 பில்லியனைத் தாண்டிவிடும் என்று கண்காணிப்பு நிறுவனம் கணித்துள்ளது.

இது இந்தியா, துருக்கி, அமெரிக்கா, ஜப்பான், மெக்ஸிக்கோ, சிங்கப்பூர் மற்றும் கனடா உட்பட 10 நாடுகளின் சந்தைகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. பிரேஸில், இந்தோனேஷியா மற்றும் தென் கொரியாவில் மக்கள் நாளொன்றில் 5 மணித்தியாலங்களை தொலைபேசி செயலிகளில் செலவிடுகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இ.தனிஸ்ரன்

ரசிக்கும் சீமானே!

# அனுசக்திப் பார்வையில்...!

இந்த காலத்துல காதல் கல்யாணம் எல்லாமே அப்புறம். ஆனா ஒருத்தர பார்த்ததுமே முதல்ல உருவாகுறது CRUSH தான். ஒருத்தர முதல் தடவையா பார்க்கும் போதே வார்ற ஈர்ப்பு அது. நாம எல்லாருமே அன்றாட வாழ்க்கைல EXPERIENCE பண்ற ஒரு விஷயம் தான் அது. பார்த்ததும் "அய்யாஹ்" னு நெனச்சு பழகின பிறகு "அய்ய்யே" என்டு நினைச்ச சந்தர்ப்பங்களும் நிறையவே நடந்திருக்கும். ஆனா அதையே தான் காதலோட முதல் படியாவும் சொல்றாங்க. Love at first sight எண்டும் சொல்லலாம்.

*'முதன் முதலில் பார்த்தேன்*
*காதல் வந்தது*
*எனை மறந்து*
*எந்தன் நிழல் போகுது'*

இப்பிடியாக இருவருக்கிடையில வாற attraction [காப்பியங்கள்ல தொடங்கி கிட்டடில வந்த படங்கள் வர] கண்கள் பார்வைகளை பரிமாற்றி கொள்ளேக்க நிகழ்றதா தான் காட்சிபடுத்தியிருக்காங்க.

*//பார்த்த முதல் நாளே*
*உன்னை பார்த்த முதல் நாளே*
*காட்சிப் பிழை போலே உணர்ந்தேன்*
*காட்சிப் பிழை போலே//*

காட்சிப்பிழை! வாழ்க்கையே திசை மாறப் போவதற்கான அறிகுறி.

*********

கண்ணும் கண்ணும் கலந்த போதே கற்பு போறதாவும்,

*'கண்ணும் கண்ணும் தான் கலந்தாச்சு*
*கலப்பு காதல் தான் கருவாச்சு*
*கண்ணில் மட்டும் கற்பு போயாச்சு'*



கண்ணும் கண்ணும் கொள்ளை யடிக்கிறதாவும்,

**‘கண்ணும் கண்ணும் கொள்ளை அடித்தால் காதல் என்று அர்த்தம்’**

எவ்வளவோ எழுதி தீர்த்திருக்காங்க. அப்பிடி என்னதான் force இருக்கு இந்த கண்ணுல எண்டு யோசிக்கேக்க தான், விழியீர்ப்பு விசைய புவியீர்ப்பு விசைக்கு ஒப்பிடுறாங்கனு தெரிய வந்திச்சு.

**‘உன் விழி ஈர்ப்பு விசையினிலே**
**அன்பே அன்பே**
**நான் வந்து விழுந்து விட்டேன்**
**அன்பே அன்பே’**

ஆப்பிள் மரத்துக்கு கீழ படுத்திருந்த நியூட்டன், ஆப்பிள் பழம் விழ புவியீர்ப்பு விசையை கண்டுபிடிச்சாரு. உலகத்தில உள்ள எல்லாத் திணிவுமே ஒன்றை ஒன்று கவருமனு கணித சமன்பாடுகள் மூலம் நிறுவினாரு. காதலிலலோ,

**‘அடி நியூட்டன் அப்பிள் விழ**
**புவி ஈர்ப்பை கண்டானடி**
**இன்று நானோ உன்னில் விழ**
**விழி ஈர்ப்பை கண்டேனடி’**

*********

கிரஸ் எண்ட நிலையிலயிருந்து காதல் அரும்ப ஆரம்பிக்கேக்க முதலில டிஸ்டர்ப் பண்ணுறதும் கண் தான். முழுச்சிட்டிருக்கும் போதே கனவு காண வைக்கிற அதே கண்களை தான் நேரில பார்த்து பேச வெளுக்கிட்டால் கூச்சம் கூசும்!

**//கண் பார்த்துக் கதைக்க**
**முடியாமல் நானும் தவிக்கின்ற**
**ஒரு பெண்ணும் நீ தான்//**

பேச வேண்டும் போல கிட்ட போனாலும் ஒரு பார்வையோடயே திரும்ப வைக்கும் காதல்!

**‘பேச எண்ணி சில நாள்**
**அருகில் வருவேன்**
**பின்பு பார்வை போதும் என நான்**
**நினைத்தே நகர்வேன்’**



அதே இரு பக்கமும் சம்மதித்துவிட்டால் கண்டதும் கண்களால் ஒரு சிரிப்பு. அந்த சிரிப்பிலே ஆயிரம் ஆயிரம் வான வேடிக்கைகள்.

**‘பம்பரக் கண்ணாலே**
**காதல் சங்கதி சொன்னாளே**
**தங்கச்சிலை போல் வந்து**
**மனதைத் தவிக்க விட்டாளே’**

*********

காதல் கனிய தொடங்கிவிட்டால், ஈர்ப்பு அற்ற நிலையில மிதக்கிற போலவே இருக்கும். சுற்றம் மறந்த தனிமை இனிமை.



மௌனம் கவ்விக் கொள்ள பார்வைகளை பரிமாறி, கண்கள் பேசும் மொழியிலேயே காதல் வளருமாம்! அந்த மொழியை புரிந்து கொண்டே காதல் வாழும் என்கிறார்கள் கவிஞர்கள்.

**‘கண்மணியே காதல் என்பது கற்பனையோ காவியமோ கண் வரைந்த ஓவியமோ’**

கண்களால் பேசி கண்களால் சுவாசித்து தானே கண்ணீர் பெருக்கி நீர் வார்த்து வளர்க்கும் “காதற்செடி“ நிஜமாகவே மெடிகல் மிராகிள் தானே! சலிக்காதா என்ன?

**//கண் கொட்ட முடியாமல் முடியாமல் பார்த்தும் சலிக்காத ஒரு பெண்ணும் நீ தான்//**

இதே காலங்களிலேயே கவிஞர்கள் எழுதி வச்ச உயர்வு நவிற்சி எல்லாம் இரு பக்கமும் பரஸ்பரம் பாயும். தெளிவா சொன்னா உருட்ட ஆரம்பிப்பாங்க!

இலக்கிய காதலில் தொடங்கி இன்டர்நெட் காதல் வரை காலத்துக்கு ஏற்றது போல விதம் விதமாக உருட்டல்கள். “கெட்டப்பை மாத்தினாலும் கேரக்டரை மாத்த மாட்டேங்கிறியே” எண்டு நம்ம வடிவேலு சொன்ன போல, காலம் மாறினாலும் பெண்களின் கண்கள் ஆண்களில் உருட்டுக்கு எப்பவுமே முதலிடம்.

அன்றைய காலத்தில்,

**‘தென்னு தமிழ் பள்ளு உன் கண்ணில் உள்ள கள்ளு’**

பள்ளு எண்டது தமிழோடு சிற்றிலக்கிய வகையில ஒண்டு. விவசாய சமூக மக்களின் வாழ்வியலை அடிப்படையாக கொண்ட சிற்றிலக்கிய வகை இது. முக்கூடற் பள்ளு பிரபலமானது. ஈழத்திலும் “பறாளை விநாயகர் பள்ளு“ பிரபலம். பள்ளு படிக்கும் போது கிடைக்கும் உம்மத்தம் காதலி கண்ணை பார்க்கும் போது கிடைப்பதாக உளறல்.

**‘கண்ணிமையில் தூண்டிலிட்டு காதல் தனை தூண்டிவிட்டு எண்ணி எண்ணி ஏங்க வைக்கும் ஏந்திழையே’**

ஏந்திழை என்றால் அழகிய ஆபரணங்களை அணிந்த பெண்ணாம்.





இன்று,
**‘சயனைட் சயனைட் விழியால்
மயக்கும் பொயற்றிக் மொழியால்
இனிக்க இனிக்க கொல்லும்
கொலையாளி’**

*********

இப்படி இரண்டு பக்கமும் தேய்ந்து வளர்ந்த காதலுக்கு திருமணமாகி கூடி வாழும் போதும்,

**//காலை எழுந்ததும்
என் கண்கள் முதலில்
தேடிப் பிடிப்பது உந்தன் முகமே
தூக்கம் வருகையில்
கண் பார்க்கும் கடைசி
காட்சிக்குள் நிற்பதுமுன் முகமே//**

உனக்கு நீ எனக்கு நான் என்று அத்தனை வருடமாக கண்ட கனவு அத்தனையையும் திருமண வாழ்வின் ஆரம்பத்தில் ஆசையோடு கொண்டாட ஆரம்பிப்பார்கள். தேக்கி வைத்த காமமும் கண்களால் கரைந்து போகும் காலம் அது.

**‘கண்ணுக்குள்ளே உன்னை
வைத்தேன் கண்ணம்மா
நான் கண்கள் மூடி மாட்டேனடி
செல்லம்மா’**

என்று காதலிக்கும் காலத்தில சொன்னதெல்லாம்,

**//உன்னை மறந்து
நீ தூக்கத்தில் சிரித்தாய் தூங்காமல்
அதைக் கண்டு ரசித்தேன்
தூக்கம் மறந்து நான்
உனைப் பார்க்கும் காட்சி கனவாக
வந்ததென்று நினைத்தேன்//**

என்று கனியும் போது காதல் உண்மையிலே முழுமையாகிறது.

இப்படி முழுமையான காதலில், சண்டைகள், சோதனைகள் வந்தாலும் காதல் தோய்ந்த கண்கள் ஆறுதல் சொல்லும். கஷ்டங்களை கடக்க தேவையான பலத்தை கொடுக்கும். பார்வைகள் கலக்கும் போது அத்தனை சவால்களும் துன்பமும் துரும்பென ஆவது விஞ்ஞானத்தால் விளக்க முடியாத விந்தை தான்!

**//காட்டிக் கொடுக்கிறதே
கண்ணே காட்டிக் கொடுக்கிறதே
காதல் வழிகிறதே
கண்ணில் காதல் வழிகிறதே//**



uthila photography

| 1 | | 2 | | | | 3 | 4 |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| | | | | | 5 | 6 | |
| 7 | | | | 8 | | | |
| | | | | 9 | | 10 | |
| 11 | 12 | | | 13 | | | |
| | 14 | | | | | 15 | 16 |
| 17 | | | | | 18 | | |
| | 19 | | | | | 20 | |




**இடமிருந்து வலம்**

1- ஒரு வகை கிழங்கு
3- செவிலித்தாய் (திரும்பி)
5- வெற்றிலையோடு சேர்த்து சாப்பிடுவது (குழம்பி)
7- கிராமிய நடனங்களில் ஒன்று
9- நிலையற்ற மனதின் ஆசை
11- நஞ்சு (திரும்பி)
13- நேரம் (குழம்பி)
14- விரைவு
15- சம்மதம் (திரும்பி)
17- ஒரு தானியம்
18- தவத்தால் கிடைப்பது (திரும்பி)
19- குளம் (குழம்பி)
20- சேவை

**மேலிருந்து கீழ்**

1- நவதானியங்களில் ஒன்று
2- இலங்கைக்கு அருகில் அடிக்கடி தாழமுக்கம் ஏற்படும் இடம்
3- அரைவாசி (தலைகீழ்)
4- செல்வாக்கு
5- இராசி
8- பிணம் (குழம்பி)
10- தின்பண்டம் (குழம்பி)
12- கணித வடிவம் ஒன்று
16- மாதங்களில் ஒன்று

**சரியான விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## குறுக்கெழுத்துப்போட்டி - 38 விடைகள்

| 1 அ | 2 ண | ங் | 3 கு | | 4 ம் | 5 ர | 6 ம |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 7 க | ண் | | 8 ர | 9 தி | | 10 டி | த |
| 11 டு | வ | | 12 ங் | ச | 13 ம | க | ம் |
| | 14 ம் | 15 த | கு | | ங் | | |
| 16 க | | லை | | 17 ந | க | ர | 18 ம் |
| 19 ம | லை | | 20 டு | ட் | வ | | ப |
| ம் | | 21 க | ப | ட | ம் | | ல |
| | 22 ட | தி | ட் | ம் | | 23 ஆ | க |

29

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

# ஈழச் சூழலியல்

## இறப்பர் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளினால் நீர் மாசடைதல்

இலங்கையில் இறப்பர் பயிரிடப் பட்டுள்ள பரப்பளவு 200,000 ஹெக்டயர்கள் ஆகும். இதேவேளை உற்பத்தி செய்யப்பட்ட உலர் இறப்பரின் அளவு 110,000 தொன்கள் ஆகும். இவை பெரும்பாலும் டயர்கள், ரியூப்கள், வால்வுகள், சப்பாத்துகள், நீர் குழாய்கள் என்பனவற்றை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகின்றன. கிறேப் இறப்பர்கள், புகையூட்டப்பட்ட சீட் இறப்பர்கள்(RSS) என்பன சேதன மாசுபடுத்திகள், ஏனைய இரசாயனங்கள் என்பனவற்றை அதிகளவில் கொண்ட கழிவு நீரை உருவாக்குகின்றன. இக்கழிவு நீர்



குளித்தல், கழுவுதல், பொது நீர் வழங்கலிற்கென நீரைப் பெறல் என்பனவற்றிற்குப் பயன்படுத்தப்படும் அருவிகள், ஆறுகள் என்பனவற்றை அடைகின்றன. கழிவு நீர் வெளியேறுவதால் உருவாகும் துர்நாற்றம் தொடர்பாக இறப்பர் பதனிடும் தொழிற்சாலைகளிற்கருகே வசிக்கும் மக்கள் முறையிடுவதையும் காணக் கூடியதாய் உள்ளது.

இறப்பர் உற்பத்திகளை தயாரிக்கும் போது பல்வேறு கட்டங்களில் பல இரசாயனங்கள் சேருகின்றன. பதப்படுத்த முன்னரே திரள்வதைத் தடுப்பதற்கு சோடியம் சல்பேற்றும், நொதியத் தாக்கத்தின் காரணமாக நிறமாற்றமடைவதைத் தடுப்பதற்கு சோடியம் மெற்றாபைசல்பைட்டும், கரோற்றின்களை அகற்ற நக்சோபிலிச்சும், திரளடைவதற்கு போமிக் அமிலம் அல்லது ஒக்சாலிக் அமிலம் என்பனவும் இடப்படுகின்றன.

ஒரு தொன் கிறேப் இறப்பரை உற்பத்தி செய்வதற்கு ஏறத்தாழ 32 கன மீற்றர் நீர் பயன் படுத்தப்படுகின்றது. புரதங்கள், வெல்லங்கள், சல்பைற்றுக்கள், மெகாப்டன்கள், ஆகியவற்றோடு



நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் என்பனவற்றைக் கொண்டுள்ளதாக கழிவு நீர் காணப்படுகிறது. கழிவு நீரின் pH பெறுமானம் ஏறத்தாழ 5.5 ஆகும்.

அமிழ்த்தி எடுக்கப்படும் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு செறிவாக்கப்பட்ட இறப்பர் பால் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு உற்பத்தி செய்ய வேண்டிய பொருட்களின் உருவங்கள் மைய நீக்க விசைக்கு உட்படுத்தப்பட்ட இறப்பர் பாலில் தோய்த்து எடுக்கப்படுகின்றன. இவ்வாறான உற்பத்திப் பொருட்களிற்கான உதாரணங்களாவன: கையுறைகள், பலூன்கள், கருத்தடை உறைகள் என்பனவாகும். பெரும்பாலான உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும், வேகமாக வளர்ந்து வரும் ஒரு கைத்தொழிற் துறையாகும். எனினும், பல மாசுபடுத்திகளைக் கொண்ட பெருமளவான நீரை இத்துறை உற்பத்தி செய்கின்றது.

அமோனியா, சிங்க் ஒட்சைட்டு. டெட்ரா மீமீல்டைசல்பைற்றுக்கள் என்பன பதனிடுவதற்கு முன்னரே திரளுவதைத் தடுப்பதற்கும் பாதுகாப்புப் பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. கழிவு நீரின் pH பெறுமானம் 4.5 ஆகும்.

## உலர்த்திய தேங்காய் தொழிற்சாலையினால் நீர் மாசடைதல்

இலங்கை 30,000 தொன் உலர்த்திய தேங்காய்ப் பூவை உற்பத்தி செய்தது. இவற்றில் பெரும் பாலானவை ஏற்றுமதி செய்யப்பட்டன. உண்மையில் பிலிப்பைன்சை அடுத்து, இலங்கையே உலகில் ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இக்கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் ஒரேயொரு இரசாயனம் கல்சியம் ஹைப்போகுளோரைட் ஆகும். ஏனைய அனைத்து கழிவுகளும் தேங்காயின் நீரிலிருந்தே வருகின்றன. இவை இரசாயன ஒட்சிசன் தேவை,(COD) உயிரியல் ஒட்சிசன் தேவை(BOD) என்பனவற்றை அதிகளவில் கொண்டுள்ளன. இவற்றின் அளவுகள் முறையே 40,000, 10,000 mg/l ஆகும். ஒரு நாளில் 50,000 காய்களைப் பதனிடும் கொள்ளளவினைக் கொண்ட ஆலையொன்று 10,000 லீற்றர் தேங்காய் நீர் உட்பட 50 கன மீற்றர் கழிவு நீரை உற்பத்தி



செய்கின்றது. கழிவு நீர் அதிக செறிவில் காபோவைதரேற்று, எண்ணெய்கள், கிறீஸ் என்பனவற்றைக் கொண்டுள்ளதோடு, ஆலைகளிற்கு அருகே அமைந்துள்ள நீர்நிலைகளை மிகவும் மோசமாகப் பாதிக்கும். இதனால் குளித்தல், குடிநீர் என்பனவற்றிற்குப் பிரச்சினைகள் ஏற்படலாம். இக்கழிவு நீர், அது சென்றடையும் நீர்நிலையிலுள்ள ஒட்சிசனின் செறிவைக் குறைக்கும். இதனால் நீர் வாழ் உயிரினங்களிற்கு ஆபத்தினை ஏற்படுத்தும். இவற்றின் குறைந்த **pH** இன் காரணமாக பயிர்களிற்கும் தீங்கினை ஏற்படுத்தும்.

### பாற் தொழிற்சாலைகளினால் நீர் மாசடைதல்

85 பிராந்திய பால் சேகரிப்பு நிலையங்களிலிருந்து வருடாந்தம் மொத்தமாக 81 மில்லியன் லீற்றர் பால் சேகரிக்கப்பட்டு, பால் பதனிடும் தொழிற்சாலைகளிற்கு விநியோகிக் கப்படுகின்றன. விநியோகிக்கப்பட்ட பால் கிருமியழிக்கப்பட்ட பால், தொற்று நீக்கம் செய்யப்பட்ட பால், ஐஸ்கிறீம், யோகட், தயிர், வெண்ணெய், சீஸ், கட்டிப்பால், பால்மா, ஏனைய பொருட்கள் என்பனவாகத் தயாரிக்கப்படுகின்றன. தாங்கிகளையும், கொள்கலன்களை யும் கழுவுதல், துளைகளிலிருந்து வெளியே சிந்துதல், கையாளல், பழுதடைந்த பொருட்களை அகற்றல், சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட தூய்மைப் படுத்திகள் என்பனவற்றிலிருந்தே பிரதானமாக கழிவு நீர் உருவாகின்றது.

ஒட்சிசன் குறைவாக உள்ள போது பால் வெல்லம், விரைவாக லக்றிக் அமிலமாக மாறுவதனால் கழிவு நீர் அமிலத்தன்மையானதாகக் காணப்படும். இதனால் கேசின் வீழ்படிவாகி உயர்ந்தளவான உயிரியல் ஒட்சிசன் தேவையுடன் கரிய நிறமான கழிவை உருவாக்கும். இலங்கையிலுள்ள பெரும்பாலான பால் பதனிடும் தொழிற்சாலைகள் தமது கழிவுப் பொருட்களை எவ்விதமான பரிகரணங்களையும் மேற்கொள்ளாது அருவிகளிலும், ஆறுகளிலும் விடுவிக்கின்றன. இதனால் கழிவு நீர் சென்றடையும் நீர்நிலையிலுள்ள நீரில் ஒட்சிசனின்



செறிவு குறைகின்றது. அத்துடன் அந்நீரில் துர்மணம் வீசுவதோடு, நீர் வாழ் உயிரினங்களிற்கும் ஆபத்தானதாக மாறும். இந்நீரை மனிதர்கள் குடிப்பதற்கோ அல்லது குளிப்பதற்கோ பயன்படுத்த முடியாது.



### புடவைகளைப்பதனிடும் தொழிற்சாலைகளினால் நீர் மாசடைதல்

பருத்தி, செயற்கைப் பொருட்கள் என்பனவற்றிலிருந்து இறுதி விளைபொருளாக துணிகளை உற்பத்தி செய்வதாக புடவைக் கைத்தொழில் காணப்படுகிறது. துணிகளைத் தயாரிப்பதிலுள்ள மூன்று முக்கியமான படிகள்
நூலைத்திரித்தல் (Spinning)
நெய்தல் (Weaving)
முடிவுறுத்தல்(Finishing)
ஆகியனவாகும்.

நூலைத்திரித்தல் நெய்தல் என்பன அடிப்படையில் உலர் படிமுறைகள் ஆகும். இவை அரிதாகவே கழிவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. மறுபுறம் இறுதி பொருளைத் தயாரிக்கும் படிமுறையில் பல சேதன, அசேதன இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதோடு, வெளியேறும் கழிவுநீர் ஏராளமான மாசுபடுத்திகளைக் கொண்டிருக்கும்.

ஆராய்வோம்...............

## சீயஸாக அர்னால்ட்

BMW மின்சார கார் விளம்பரத்தில், ஹாலிவுட் சூப்பர் ஸ்டார் அர்னால்ட் ஸ்வாஸ்நேகர் கிரேக்க கடவுள் சீயஸாக நடித்துள்ளார்.





# இந்திய அரசியலும் நேரு பரம்பரையும்

## ஒரு விமர்சன ரீதியான ஆய்வு

ப. வனஜா

2

### 3. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வு வரலாற்று அணுகுமுறை, விபரணப் பகுப்பாய்வு அணுகுமுறை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். சமகாலத்தில் காணப்படுகின்ற சில நிகழ்வுகளை கடந்த காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளின் பின்னணியில் ஆய்வு செய்வது வரலாற்று அணுகுமுறை ஆகும். அவ் வகையில் நேரு பரம்பரையின் வரலாறு சார்ந்த விடயங்கள் சேகரிக்கப்பட்டு வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யப்படுகிறது. நேரு பரம்பரையினரின் செல்வாக்குத் தொடர்பாக கருத்துக்களையும் விபரங்களையும் தேடிக் கண்ட றிந்தும் அவற்றிற்குரிய விபரங் களைத் திரட்டியும் பண்புசார் ரீதியாகவும் விபரண ரீதியாகவும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகிறது. ஆய்வு நூல்கள், கடந்த காலப் பத்திரிகைகள், இணையத்தளக் குறிப்புக்கள், ஆவணக் காணொளிகள் போன்ற பல்வேறு மூலாதாரங்களிலிருந்து ஆய்வுக்கென திரட்டப்பட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்குட்படுத்தி அவற்றை விபரிக்கும் வகையில் விபரண ஆய்வு முறைமை பயன்படுத்தப்படுகின்றது.

ஆய்விற்கு தேவையான தரவுகள் அனைத்தும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற அடிப்படையில் சேகரிக்கப்பட்டுள்ளது. ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைக் கட்டுரைகள், இணையத்தள வெளியீடுகள், சஞ்சிகைகள், ஆவணக் காணொளிகள் போன்றவற்றிலிருந்து இவ் ஆய்விற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாக பெறப்பட்டுள்ளன.




## 4. முடிவுகளும் கலந்துரையாடல்களும்

இந்திய அரசியலில் நேரு பரம்பரையினர் ஏற்படுத்திய அரசியல், பொருளாதார, சமூக ரீதியான தாக்கங்கள் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இந்தியா விடுதலை பெற்ற பின்னர் நேரு அவரது உலகளாவிய அனுபவத்தின் அடிப்படையில் இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு வடிவத்தையும் வனப்பையும் கொடுத்தார். நேரு அணிசேராமைக் கொள்கை என்ற அடித்தளத்தில் இந்திய வெளியறவுக் கொள்கையை நிர்மாணித்தார். நேரு பரம்பரையினரின் அரசியல் வரலாற்றில் அணிசேரா இயக்கம் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்றது.

### கூட்டுச் சேரா இயக்க மாநாடுகள்

| எண் | திகதி | நடைபெற்ற இடம் |
|---|---|---|
| 1. | 1961 செப்டெம்பர் 1-6 | பெல்கிரேட் (யுகோஸ்லாவியா) |
| 2. | 1964 அக்டோபர் 5-10 | கெய்ரோ (எகிப்து) |
| 3. | 1970 செப்டெம்பர் 8-10 | லுசாகா (ஜாம்பியா) |
| 4. | 1973 செப்டெம்பர் 5-9 | அல்ஜியர்ஸ் (அல்ஜீரியா) |
| 5. | 1976 ஆகஸ்ட் 16-19 | கொழும்பு (ஸ்ரீலங்கா) |
| 6. | 1979 செப்டெம்பர் 3-9 | ஹவானா (கியூபா) |
| 7. | 1983 மார்ச் 7-12 | புதுடெல்லி (இந்தியா) |
| 8. | 1986 செப்டெம்பர் 1-6 | ஹராரே (ஜிம்பாப்வே) |
| 9 | 1989 செப்டெம்பர் 4-7 | பெல்கிரேடு (யுகோஸ்லாவியா) |
| 10 | 1992 செப்டெம்பர் 1-6 | ஜகார்த்தா (இந்தோனேசியா) |
| 11 | 1995 அக்டோபர் 18-20 | கார்டஜினா (கொலம்பியா) |
| 12 | 1998 செப்டெம்பர் 2-3 | டர்பன் (தென்னாபிரிக்கா) |
| 13. | 2003 பெப்ரவரி 20-25 | கோலாலம்பூர் (மலேசியா) |
| 14. | 2006 செப்டெம்பர் 15-16 | ஹவானா (கியூபா) |
| 15. | 2009 ஜூலை 11-16 | ஷர்ம் எல் ஷேக் (எகிப்து) |
| 16. | 2012 ஆகஸ்ட் 26-31 | டெஹ்ரான் (ஈரான்) |
| 17 | 2016 ஜூலை | வெனிசுலா |

ஆதாரம்:
வெங்கடேசன்.க.இ (2016), "உலக அரங்கில் இந்தியா", வர்த்தமானன் பதிப்பகம், சென்னைஇ ப -148





ஆதாரம்: www.newsfirst.lk.

பஞ்சசீலக் கொள்கை நேரு உருவாக்கிய வெளிநாட்டுக் கொள்கையின் மற்றொரு பரிணாமம் ஆகும். நேரு அண்டை நாடுகளுடன் நெருங்கிய நட்புறவு கொள்வதற்காக உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார்.

நேபாளம், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், பூட்டான் ஆகிய நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் பின்னர் வந்த பிரதமர்களுக்கு முன்மாதிரிகளாக அமைந்தன. இவை போன்ற நட்புடன்படிக்கைகள் ஆப்கானிஸ்தான், எகிப்து, ஈரான், ஈராக், சிரியா, துருக்கி, இலங்கை ஆகிய நாடுகளுடனும் செய்து கொள்ளப்பட்டன. இந்திய பாகிஸ்தான் உறவு, இந்திய இலங்கை உறவு, இந்திய வங்கதேச உறவு, இந்திய நேபாள உறவு போன்றன இந்திராகாந்தி ஆட்சிக் காலப்பகுதியில் வலுப்படுத்தப்பட்டது.

தேடுவோம்...

காவ்யமோகன்



# சித்திராங்கதா

## இருட்டுச் சுரங்கம்

யாரும் அறிய நேரா வண்ணம் தன் ஆதர்ச நாயகி சித்திராங்கதாவை சந்திக்க, அவளிடமிருந்தே வந்ததாக நம்புகின்ற அந்த முதல் அழைப்பை சாட்சியாகக்கொண்டு சட்டநாதர் கோயில் நோக்கி இரகசிய சுரங்க வழியினூடு சென்று கொண்டிருக்கும் வருணகுலத்தானிற்கு தன் பயணத்தை தாமதிக்க வைத்த அந்த உருவம் நல்லைச் சேனாதிபதி மகிழாந்தகனுடையதே என்று தெரிந்து கொண்ட நொடி கொஞ்சம் ஆச்சரியமாகவும் பெருமளவு நிம்மதியாகவும் இருந்தது.

“என் நண்பன் தான் வந்துகொண்டிருக்கிறான். நான் எதற்கு இனி ஒளிந்திருக்க வேண்டும்.” என்று விரைந்து வெளிப்பட துணிந்த வருணகுலத்தான் சிந்தையில் மாருத வல்லியின் முகம் சிலகணம் தோன்றி அவனை தடுத்து நிறுத்தியது.

“இச்சமயத்தில் நான் எப்படி இங்கே வந்திருக்க முடியும்?” என்கிற கேள்விக்கு தான் மகிழாந்தனிடம் என்ன பதில் கூற முடியும் என்ற யோசனையில் நின்ற இடத்திலேயே மேலும் ஒளிந்து நின்று கொண்டான் வருணகுலத்தான்.



“என்ன இருந்தாலும் இது நல்லூர் இராசதானியின் ஓர் இரகசிய வழி! நான் இங்கு வந்திருக்கும் ஓர் அந்நியன். எனக்கு இவ்வழி பற்றி ஏதும் தெரியக்கூடாது என்பதால் தானே இவ்வழி பற்றிய இரகசியத்தை அரசரோ வேறு யாரோ இதுவரை என்னிடம் கூறியதில்லை...” என்று தன் எண்ணப்போக்கில் பயணித்துக் கொண்டிருந்த வருணகுலத்தானிற்கு நடந்த முடிந்த ஒரு சம்பவம் தீடீரென நினைவில் வந்து எதையோ புரியவைத்தது.

“நான் முதன்முதலாய் நல்லூர் அரசவைக்குள் பிரவேசித்த நாளில் என்னை எங்கே தங்க வைப்பது என்கிற கேள்விக்கு “வீரர்கள் யாவரும் கோப்பாய் அரச மாளிகையில் தங்க வைக்கப்படுவதால் தஞ்சை தளபதி

மந்திரி மனையில் தங்குவதே உசிதமாகும்.” என்பதுபோல் அன்று மந்திரியார் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தபோதுதான் வருணகுலத்தானிற்கு அந்த சந்தேகம் உதித்தது.

“அப்படியாயின் இந்த சுரங்கத்தின் வழியே பயணித்தால் கோப்பாய் மாளிகைக்கு செல்ல முடியுமா? அத்தனை தூரம் இந்தச்சுரங்கப்பாதை நீளமுடியுமா?
ஆமாம்.. உண்மைதான்” என்பதுபோல் மீண்டும் இன்னொரு சம்பவம் அவன் நினைவிற்குள் வந்தது.

“வன்னியர் விழா பற்றிய அறிவிப்பை எனக்கு தெரியப்படுத்த கோப்பாய் மாளிகை நோக்கி தனது ரதத்தில் வந்த மந்திரியார், தகவல் அறிந்து நான் அஸ்வதமங்கலத்தில் ஏறி அதிவேகமாக புறப்பட்டு நல்லை கோட்டை நோக்கி வருவதற்கு முன்னமே மந்திரியார் கோட்டைக்குள் வந்து அரசரை சந்திக்க சென்றுவிட்டதாய் அன்று மாருதவல்லி கூறினாரல்லவா? அப்படியாயின் அன்று மந்திரியார் இந்தச் சுரங்கப்பாதை வழியாகத்தான் வந்திருந்தாரா?” என்கிற கேள்வியோடு அன்று மந்திரியாரது ரதம் வெறுமையாக சாரதியோடு மாத்திரம் கோட்டை நோக்கி வந்து கொண்டிருந்த காட்சியும் அவன் நினைவில் தோன்ற “ஆம்... நிச்சயமாக கோப்பாய் மாளிகைக்கும், மந்திரிமனைக்கும் இடையேயான ஒரு நீளமான சுரங்கப்பாதையாகத்தான் இச்சுரங்கவழி இருக்க வேண்டும்” என தனக்குள் உறுதியானான்.

“அப்படியாயின் இப்போது மகிழாந்தகன் வந்து கொண்டிருக்கும் திசை கோப்பாய் மாளிகையிலிருந்து வரும் திசையாகத்தான் இருக்க வேண்டும்.”

மகிழாந்தகனது தீப்பந்த ஒளி இப்போது சந்தி முழுவதும் பரவி இருந்தது. அவன் சந்தியை நோக்கி நெருங்கிவிட்டான் என்பதை உணர்ந்து தான் வந்த வீதி வழியே சிறிது பின்னோக்கி சென்று மேலும் மறைவாய் நின்று கொண்டான் வருணகுலத்தான்.

மகிழாந்தகன் தான் நிற்கக்கூடிய வீதியை நோக்கி வந்துவிடக்கூடுமோ என்கிற யோசனையில் பதற்றத்தோடு இருந்த வருணகுலத்தான் மகிழாந்தகன் விலகிச்சென்றதும் ஒரு நிம்மதிப்பெருமூச்சு விட்டான்.

அவன் வேறொரு வீதி வழியாக அவசரமாக விலகிச் சென்று விட்டான். “இவ்வளவு அவசரமாக மகிழாந்தகன் எங்கு செல்கிறான்? இந்த வீதிகள் யாவும் எதை நோக்கிச் செல்கின்றன?” என எதுவும் தெரியாதவனாய் பெருங்குழப்பத்தில் நின்று கொண்டிருந்தான் வருண குலத்தான். ஆனால் அது பற்றி யோசித்து நேரத்தை மேலும் வீணாக்காமல் மாருதவல்லி கூறியபடி வடக்குத்திசை பாதையினூடு சென்று விரைந்து சட்டநாதர் கோயிலை அடைந்தாக வேண்டும் என தன் பயணத்தை மீண்டும் வேகமாக தொடர தயாரானான்.

மகிழாந்தகன் தொலை தூரம் விலகிச்சென்ற பின்தான் தன்கையில் தீப்பந்தம் இல்லாதது வருண குலத்தானிற்கு தெரிந்தது. மீண்டும் சுரங்கத்தினுள் மையிருட்டு பற்றிக் கொண்டது. வந்த பாதை கூட பலவாறாக சுழன்று இருந்தமையால் தான் நிற்கின்ற திசை எது என்பது கூட அவனிற்குத் தெரியவில்லை.

சட்டநாதர் கோயிலிற்கு செல்ல சந்தியில் வடக்குதிசை வீதி வழியே சென்றாகவேண்டும் என்றால் இந்த சந்தியில் எது வடக்குதிசை வீதி என்பதை இப்போது எப்படி அறிவது என்று தெரியாமலும் அங்கே தனக்காக காத்துக்கொண்டிருப்பாள் என்று நம்புகிற சித்திராங்கதாவின் முகம் உள்ளத்தில் தோன்றி



அவனை வேகப்படுத்தவும் செய்வது ஏதென்றறியாமல் அந்த சுவர்களிலே மீண்டும் மீண்டும் முட்டி மோதிக்கொண்டிருந்தான்.

ஒரு யோசனை திடீரெனத் தோன்றியது. “மகிழாந்தகன் கோப்பாய் மாளிகையில் இருந்து வெறெங்கோ செல்கிறான்? அல்லது வேறெங்கோயிருந்து கோப்பாய் மாளிகைக்கு செல்கிறான் என்பது உண்மையாக இருந்தாலும் கோட்டைக்கு வெளியே இருக்கும் சட்டநாதர் கோயிலிற்கும் கோப்பாய் மாளிகைக்கும் இடையே செல்ல இவ் இரகசிய வழியை பயன்படுத்த வேண்டிய அவசியமில்லையே” என்கிற கேள்வி அவன் புத்தியில் உதித்தது.

அந்தக் கேள்வியினையே நம்பி தான் வந்த வழி, மகிழாந்தகன் வந்து சென்ற பாதைகளை தவிர்த்து எஞ்சியுள்ள பாதையே வடதிசையாக இருக்கவேண்டும் என்று ஊகித்தான். தன் ஊகத்தினையே ஒரே நம்பிக்கையாய்க் கொண்டு தன் கைகளினால் சுவரினைத் தடவியபடியே அவ்வீதி வழியே முன்னேறத் தொடங்கினான்.

அவன் உள்ளத்தின் அதிவேகத்தோடு அந்த இருண்ட சுரங்கத்தினை கடக்கின்ற போது சுவருடன் மோதுகின்ற நொடிகள் பெருவலியை அவனிற்கு உண்டாக்கியது. ஆயினும் அவன் வேகம் மட்டும் குறைவதாய் இல்லை. அதே வேகத்தோடு ஒரு பெருஞ்சுவரில் முட்டி மோதி கீழே விழுந்த போதுதான் அதற்கு மேல்

அங்கு பாதை இல்லை என்பதை புரிந்து கொண்டான்.

இதுதான் மாருதவல்லி கூறிய அந்நெடுஞ்சுவராய் இருக்கவேண்டும் என எண்ணியவன் தன் இடப்புறத்தில் ஏதாவது படிக்கட்டுகள் இருக்கின்றனவா எனத் தேடினான். படிக்கட்டுக்களும் இருந்தன. பெருநம்பிக்கையோடு அவற்றில் கால்வைத்து மேலேறினான்.

காதலின் வேகம் கால்களின் போட்டியாக படிகளில் தட்டுத்தடுமாறி ஏறிக் கொண்டிருந்தான். இருளின் முடிவாய் முதல் வெளிச்சம் அவனிற்குத் தெரியத் தொடங்கியது. ஆனால் அவன் தேடி வந்த வெளிச்சம் என்பது அதுதானா?"

இருள் விலகும்...

## லதா மங்கேஷ்கர் காலமானார்

பிரபல பின்னணி பாடகி மும்பையில் லதா மங்கேஷ்கர் 06.02.2022 காலமானார். அவருக்கு வயது 92. கோவிட் பாதிக்கப்பட்டிருந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

1929 ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் தேதி மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் பிறந்தவர் லதா மங்கேஷ்கர். இவரது இயற்பெயர் ஹேமா. ஆனால் அவரது தந்தையின் நாடகங்களில் லத்திகா எனும் பாத்திரத்தில் இவர் நடித்து வந்தார். அதனால் அனைவரும் அவரை "லதா" என்று அழைக்கத் தொடங்கினர். அதுவே அவரது பெயராகவும் ஆகிப்போனது.

1949ஆம் ஆண்டு மகள் எனும் இந்தி படத்தில் தனது முதல் திரை இசை பாடலை பாடி இசை பயணத்தை தொடங்கினார். அதன்பின்பு பல்வேறு இந்திய மொழிகளில் பல்லாயிரம் பாடல்களை பாடி திரை இசையில் உச்சத்தை தொட்டார் லதா மங்கேஷ்கர். சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருதை மூன்று முறை பெற்ற லதா மங்கேஷ்கர், இந்திய சினிமாவில் மிகவும் உயரிய விருதான தாதா சாகேப் பால்கே விருதை 1989ஆம் ஆண்டு பெற்றார். எம்.எஸ். சுப்புலட்சுமி பிறகு பாரத ரத்னா விருது பெற்ற பாடகர் லதா மங்கேஷ்கர். முன்னதாக அவர் பத்மவிபூஷன் மற்றும் பத்ம பூஷன் ஆகிய விருதுகளையும் அவர் பெற்றுள்ளார்.



ப. கிரிஜா



# முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டம் 4

தற்போதய ஆண்டில் கொரோனா பரவலின் காரணமாக முன்பள்ளிகள் சில மாதங்கள் இடைநிறுத்தப்பட்டு தொடங்கப்பட்டன. இதனால் சில பெற்றோர் தமது பிள்ளைகளை சில நாட்கள் கழித்து முன்பள்ளிளுக்கு அனுப்பினர். ஆயினும் மாணவர்களது வரவு திருப்தி அளித்தது. மாணவர்களது மொழித்தேட்டத்தில் பெற்றோர் பல மனப்பாங்குகளைக் கொண்டிருந்தாலும் பெரும்பாலான பெற்றோர் அக்கறை செலுத்து கின்றனர். மேலும் மொழி விருத்தியில் சிரமப்படும் மாணவர்கள் உள்ளனர். இவர்கள் உச்சரிப்பு, பேசுதலில் சிரமம் கொள்கின்றனர்.

வலிகாமப் பிரதேசம் தமிழ் மொழியை பேச்சு மொழியாகக் கொண்டுள்ள மையால் இங்குள்ள மாணவர்களால் தாய் மொழியாகத் தமிழ் மொழியைப் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. ஆங்கில மொழியானது முன்பள்ளிகளில் ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. அத்துடன் வீட்டுச் சூழலில் தமிழ்மொழியுடன் கலந்து (மொழிக்கலப்பு) பேசப்படுகிறது. மாணவர்களின் மொழி வெளிப்பாட்டில் ஆங்கில மொழிப்பிரயோகம் சொற்கள் ரீதியாக செல்வாக்குச் செலுத்துகின்றது. இதனால் மாணவர்கள் ஓரளவு ஆங்கிலமொழி பற்றிய அறிவைத் தெரிந்து கொள்கிறார்கள்.

மாணவர்களது மொழித்திறன்களது வெளிப்பாட்டிலே வாசித்தல் திறன் கூடுதலாகப் பின்னடைவாக உள்ளது. முன்பள்ளிகளில் பாடத்திட்டத்திற்கு அமைவாக அடிப்படை மொழித்திறன்கள் மற்றும் முன்மொழித் திறன்களை மாணவர்களுக்கு விளையாட்டு ஊடாக செயற்படுத்தி மொழித்தேட்டம் அடைவதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

| மொழித்தேட்டம் தொடர்பானவை | 0% | 25% | 50% | 75% | 100% |
|---|---|---|---|---|---|
| 1.தாய்மொழித் தேட்டம் | | | | √ | |
| 2.இரண்டாம்மொழித் தேட்டம் | | | √ | | |

ஆயினும் முன்பள்ளிப் பருவம் முடிவடைந்து தரம் ஒன்றிற்கு செல்லும் போது அங்குள்ள பாடப்புத்தகங்களில் உள்ள ஒலிகளை உச்சரிக்கவும், பார்த்து வாசிக்கவும், ஒலிகளை இனங்காணவும் மிகவும் சிரமப்படுகின்றனர். தரம் ஒன்றிற்கு கல்வியைத் தொடர்வதற்கு மொழிகளில் முக்கியமாக வாசித்தல், எழுதுதல் திறன்கள் அவசியம் என்பதால் இவ்விடயங்களில் பெற்றோர்களும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்கின்றார்கள். இவற்றில் தனியார் முன்பள்ளிகளின் பங்களிப்புக்கள் கூடுதலாக இருப்பதால் அதிகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இங்கு சேர்க்கின்றமையைக் காணமுடிகிறது. இவ்வகையில் வலிகாமத்தில் உள்ள அரச மற்றும் தனியார் முன்பள்ளிகளில் அடிப்படை மொழித் தேட்டத்திற்குரிய தூண்டல் பூரணமாக அளிக்கப்படுகின்றது.

இப்பருவத்தில் ஒரு முன்பள்ளி மாணவனுக்கு இருக்க வேண்டிய அனைத்து விருத்திகளிலும் கவனம் செலுத்துகின்றனர். அந்த வகையில் முன்பள்ளிகளுக்கும் பாடசாலைகளுக்கும் இணைப்பை



| மொழித்திறன்கள் தொடர்பானவை | 0% | 25% | 50% | 75% | 100% |
|---|---|---|---|---|---|
| செவிமெடுத்தல் | | | | √ | |
| பேசுதல் | | | | √ | |
| எழுதுதல் | | | | √ | |
| வாசித்தல் | | | √ | | |

ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் பெருமளவு நடைபெறுகின்றன. எனினும் வலிகாமத்தில் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஆரம்பக் கல்வியை மேற்கொள்ளுவதற்குரிய மொழித்திறன்களில் வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன்கள் பின்னடைவாக உள்ளதால் மொழி மூலமாக ஆரம்பக் கல்வியைத் தொடர்வதற்கு உரிய முன்தேவையானது முன்பள்ளிகளில் முழுமையாக அடையப்படவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

## 5. உசாத்துணைகள்

இராசநாயகம் ,ஜெ.(2009), “யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்பள்ளிகளின்தற்போதைய நிலை”, அகவிழி.

சிவகுமார்,அ.(2004), “வடகிழக்கு மாகாண மட்டத்தில் முன்பள்ளி செயற்பரிமாணம்”, கல்வியியலாளன்

சித்திராதேவி,ஞா.(2000), “ஆரம்பக்கல்விக்கு முன்பள்ளிகளின் பொருத்தப்பாடு”, கல்வி முதுதத்துவமாணி ஆய்வுக் கட்டுரை, யாழ் பல்கலைக்கழகம்.

நவீனா, தே. (1992), “யாழ் மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர் கல்விக்குரிய கலைத் திட்டமொன்றை உருவாக்குதல்”, யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

யோகேஸ்வரி,க.(1991),
"யாழ் குடாநாட்டிலுள்ள முன்பள்ளிக் கல்வியின் தற்போதைய நிலை",
யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

"பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும்", (2016),
முன்பள்ளிப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

Homel, P. palij, M. aaroson, D. (1982) , "childhood bilingualism",new york university.

John, M.C. (1970),
"pre – school education objectives andtechniques", educational series.

முற்றும்

## செய்தித் துளிகள்

● அமெரிக்காவைச் சேர்ந்த மைக் அமோயா கின்னஸ் சாதனை படைக்கும் முகமாக சிலந்தி, தேள், கரப்பான் உள்ளிட்ட 864 பூச்சிகளை உடலில் பச்சை குத்தியுள்ளார். இது குறித்து அமோயா குறிப்பிடுகையில், நான் பூச்சிகளை விரும்புகிறேன் என பலர் நினைக்கிறார்கள் - உண்மையில் இது முற்றிலும் எதிர்மாறானது. நான் பூச்சிகளுக்கு பயப்படுகிறேன், நான் பூச்சிகளை வெறுக்கிறேன். அதனால்தான் நான் அவற்றை என் உடல் முழுவதும் வைத்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.





● முககவசத்துக்கு பதிலாக மூக்கை மட்டும் மறைக்கும் மூக்கு கவசத்தை தென்கொரியாவைச் சேர்ந்த அட்மன் நிறுவனம் வடிவமைத்துள்ளது. இதற்கு கோஸ்க் என பெயரிடப்பட்டுள்ளது.

● மெட்டா நிறுவன பங்குகளின் விலை **26%** வீழ்ச்சியடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அந்நிறுவன தலைமை செயல் அதிகாரி மார்க் ஜக்கர்பெர்க் உலக பணக்காரர்கள் பட்டியலிலில் 13 வது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.



எஸ்.எஸ்.நுஜன்




இம்முறை IPL ஏலத்தில் நடந்த சில சுவாரசியமான விடயங்களை பார்த்துவிட்டு அணிகளைப்பற்றி அலசுவோம்.

### யார் யார் வந்தாங்க..?

ஏலம் நடைபெற்ற போது ஒவ்வொரு அணி சார்பாகவும் மேசையில் இருந்தவர்கள் விபரம் வருமாறு.

**லக்னோ சூப்பர்கெய்ன்ட்ஸ் (LSG):**
சஞ்சீவ் கோயன்கா (உரிமையாளர்), சாஸ்வத் கோயன்கா, அண்டி பிலோவர் (தலைமை பயிற்சியாளர்), கவுதம் கம்பிர் (ஆலோசகர்), ரகுராம் ஐயர் (CEO), மற்றும் ஆய்வாளர் (ANALYST).



**ராஜஸ்தான் ராயல்ஸ் (RR):**
பனிஷ் ஷெட்டி (ஆய்வாளர்), ஸுபின் பாருச்சா (STRATEGY & PERFORMANCE DIRECTOR), ஜேக் லூஸ் மசிறும் (CEO), குமார் சங்கக்காரா (DIRECTOR OF CRICKET), கில்ஸ் லிண்ட்சே (HEAD OF ANALYTICS AND TECHNOLOGY), ரஞ்சித் பார்த்தகுர் (CHAIRPERSON), ரோமி பின்டெர் (TEAM MANAGER).

**குஜராத் டைட்டன்ஸ் (GT):**
விக்ரம் சோலங்கி (TEAM DIRECTOR), ஆஷிஷ் நெஹ்ரா (தலைமை பயிற்சியாளர்), கேரி கிரிஸ்டன் (உதவி பயிற்சியாளர்), ஆஷிஷ் கபூர் (உதவி பயிற்சியாளர்), சந்தீப் ராஜு (ஆய்வாளர்), அமித் சோனி (CVC), மோஹித் கோயல் (CHIEF FINANCIAL OFFICER), அரவிந்தர் சிங் (CHIEF OPERATING OFFICER).

**ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் (RCB):**
பிரத்மேஷ் மிஸ்ரா (CHAIRMAN), ராஜேஷ் மேனன் (HEAD & VP), மைக் ஹெஸ்ஸன் (DIRECTOR OF

CRICKET OPERATIONS), சஞ்சய் பங்கர் (தலைமை பயிற்சியாளர்), மலோலன் ரங்கராஜன் (HEAD SCOUT), பிரட்டி வில்தே (ஆய்வாளர்).

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (KKR):**
வெங்கி மைசோர் (CEO), பாரத் அருண் (உதவி பயிற்சியாளர்), ஆர் ஸ்ரீகாந்த் (HEAD OF TALENT SCOUTING AND PLAYER ACQUISITIONS), அபிஷேக் நாயர் (உதவி பயிற்சியாளர்), ஆர்யன் மற்றும் சஹானா கான் மற்றும் ஜஹன்வி மெஹதா (உரிமையாளர்கள்).

**சென்னை சூப்பர் கிங்ஸ் (CSK):**
காசி விஸ்வநாதன் (CEO), எல் பாலாஜி (பந்துவீச்சு பயிற்சியாளர்), சுந்தர் ராமன் (CHIEF OPERATING OFFICER), லட்சுமி நாராயண் (ஆய்வாளர்), அரவிந்த் சிவதாஸ் (ஆய்வாளர்).

**டெல்லி கேபிட்டல்ஸ் (DC):**
கிரண் குமார் கிரந்தி (CHAIRMAN & CO-OWNER), பார்த் ஜின்டால் (CO-OWNER), வினோத் பிஸ்ட் (INTERIM CEO), முஸ்தபா ஹோஸே (DIRECTOR), பிராவின் அம்ரே (உதவி பயிற்சியாளர்), சபா கரீம் (HEAD OF TALENT SEARCH).

**மும்பை இந்தியன்ஸ் (MI):**
நீதா அம்பானி (உரிமையாளர்), ஆகாஷ் அம்பானி (உரிமையாளர்), சாஹீர் கான் (DIRECTOR OF CRICKET OPERATIONS), மஹேல ஜெயாவர்த்தேனே (HEAD COACH), ராகுல் சங்க்வி (TEAM MANAGER), தேவங் பீம்ஜணி (MI MANAGEMENT), சிகேஎம் தனஞ்சய் (TEAM ANALYST).

**பஞ்சாப் கிங்ஸ் (PBKS):**
நெஸ் வாடியா (உரிமையாளர்), மோஹித் பர்மன் (உரிமையாளர்), அனில் கும்ப்ளே (DIRECTOR OF CRICKET OPERATIONS), சதீஷ் மேனன் (CHIEF EXECUTIVE OFFICER), சங்கர் ராஜகோபால் (ஆய்வாளர்), ஆஷிஷ் துளி (ஆய்வாளர்), டான் வெஸ்டன் (ஆய்வாளர்), எல்சி குப்தா (CFO).

**சன்ரைசர்ஸ் ஹைதெராபாத் (SRH):**
கே. ஷண்முகம் (CEO), டொம் மூடி (தலைமை பயிற்சியாளர்), ஸ்ரீநாத் பாஷ்யம் (GM), பிரையன் லாரா, முத்தையா முரளிதரன், காவ்யா மாறன் (உரிமையாளர்), சைமன் கட்டிச்.

## இடையில் ஏன் ஏலம் நிறுத்தப்பட்டது?

இம்முறை ஏலத்தில் மார்கியூ பிளேயர்ஸ் (நட்சத்திர வீரர்கள்) கொண்ட முதல் சுற்று நிறைவடைந்து இரண்டாம் சுற்று ஏலம் நடைபெற்று



வந்தது. இலங்கையின் வனித்து ஹசரங்க க்கு ரோயல் சலேஞ்சர்ஸ் அணி 10.75 கோடியை கேட்ட போது ஹமர்மேன் (ஏலம் விடுபவர்) ஆக செயற்பட்டு வந்த ஹக் எட்மீட்ஸ் திடிரென மயக்கம் அடைந்து சரிந்து விழுந்த துரஷ்திடமான நிகழ்வால் ஏலம் சிறிது நேரம் தடைப்பட்டது. பின்னர் அவர் நலமாக இருப்பதாகவும் அவருக்கு POSTURAL HYPOTENSION ஏற்பட்டதாகவும் அறிவித்த பிசிசிஐ, சாரு சர்மா வினை ஏலம் விடுபவராக நியமித்து ஏலத்தினை தொடர்ந்து நடத்தியது. இரண்டாம் நாளில் ஏலம் நிறைவடைந்திற்கு ஒரு சுற்று இருந்த நிலையில் மீண்டும் வந்த எட்மீட்ஸ், ஏலத்தினை நிறைவு செய்து வைத்தார்.



இதுவரை நடந்த எல்லா மெகா ஏலத்தினையும் நடத்தியவர் ஹமர்மேன் ரிச்சர்டு மேட்லி இவர் ஐபிஎல் ஆரம்பத்திலிருந்து 2017 வரை ஏலத்தினை நடாத்தி இருந்தார். 2018 இல் ஹமர்மேன் ஆக நியமிக்கப்பட்டவர் தான் இங்கிலாந்தை சேர்ந்த எட்மீட்ஸ் இவர் 35 வருடங்கள் ஹமர்மேன் ஆக செயற்பட்டு 2500க்கும் மேற்பட்ட ஏலங்களை நடாத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சென்னை சூப்பர் கிங்ஸ்

வழமை போல் தங்கள் வீரர்களை மீண்டும் எடுத்துக் கொள்ளும் உத்தியை பயன்படுத்தியுள்ளனர் இருந்தும் டு பிளெஸ்சிஸ், அதுவும் ஆச்சரியமாக சின்ன தல என அழைத்த சுரேஸ் ரெய்னா போன்ற சில வீரர்களை மீண்டும் எடுத்துக் கொள்ள வில்லை.

தொடக்க பதினோருவர் அணியில், பிரதானமாக இடம்பெறக்கூடிய ருத்துராஜ், மொயின் அலி, ராயுடு, டோனி, ஜடேஜா, பிராவோ,

**CHENNAI SUPER KINGS**

PURSE SPENT 87.05 cr | PURSE AVAILABLE 2.95 cr

| NAME | TYPE | COST ₹ (lakhs) | $(000) |
|---|---|---|---|
| N Jagadeesan | BAT/WK | 20 | 26 |
| Hari Nishaanth | BAT | 20 | 26 |
| Subhranshu Senapati | BAT | 20 | 26 |
| Ruturaj Gaikwad ★ | BAT | 600 | 800 |
| KM Asif | BOW | 20 | 26 |
| Mukesh Choudhary | BOW | 20 | 26 |
| Maheesh Theekshana ✈ | BOW | 70 | 93 |
| Simarjeet Singh | BOW | 20 | 26 |
| Rajvardhan Hangargekar | AR | 150 | 200 |
| Bhagath Varma | AR | 20 | 26 |
| Prashant Solanki | BOW | 120 | 160 |
| Ravindra Jadeja ★ | AR | 1600 | 2133 |
| MS Dhoni ★ | BAT/WK | 1200 | 1600 |
| Chris Jordan ✈ | AR | 360 | 480 |
| Dwaine Pretorius ✈ | AR | 50 | 66 |
| Ambati Rayudu | BAT/WK | 675 | 900 |
| Robin Uthappa | BAT | 200 | 266 |
| Devon Conway ✈ | BAT | 100 | 133 |
| Deepak Chahar | BOW | 1400 | 1866 |
| Adam Milne ✈ | BOW | 190 | 253 |
| Mitchell Santner ✈ | AR | 190 | 253 |
| Dwayne Bravo ✈ | AR | 440 | 586 |
| Shivam Dube | AR | 400 | 533 |
| Tushar Deshpande | BOW | 20 | 26 |
| Moeen Ali ✈ ★ | BAT | 800 | 1066 |

✈ OVERSEAS PLAYER ★ RETAINED PLAYER PRE-AUCTION PICKS USD 1 = INR 75 approx



மற்றும் தீபக் சகார் என்ற ஏழு வீரர்களுடன் ஆரம்ப வீரராகவும் 4ம் இலக்கத்திலும் விளையாடக்கூடிய டெவன் கென்வே, அசிவ், வெளிநாட்டு வேகப்பந்து வீச்சாளராக மில்னே/ ஜோர்டன்/பிரிடோரிஸ், மற்றும் சுழற்பந்து வீச்சக்கூடிய சிவம் டூபே இடம்பெறலாம். இவர்களை விடுத்து இலங்கையின் தீக்சன்ன, நியூசிலாந்தின் மிட்சல் சன்ட்னர், ரொபின் உத்தப்பா, தமிழக கோவை வீரர்களான ஹரி நிசாந்த் மற்றும் ஜெகதீசன் மற்றும் சில உள்ளூர் வீரர்கள் என ஒட்டு மொத்தமாக 25 பேர் இம்முறை அணியில் உள்ளனர். ஜடேஜாக்கு பக்கபலமாக சுழற்பந்து வீச்சக்கூடிய (பிரசாந்த் சோலன்கியை தவிர்த்து) தரமான உள்ளூர் வீரர் இல்லாத நிலையை விடுத்து அனைத்திலும் சம பலம் வாய்ந்த அணியாக இம்முறையும் பிளே ஓப் நுழைய தயாராகி இருக்கிறது.

## கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

கேகேஆர் க்கு அணியின் தலைவராக செயற்பட்ட ஒருவர் தேவைப்பட்ட நிலையில் சிரேயாஸ் ஐயர் இனை அதிக விலை கொடுத்து எடுத்தனர். ஏற்கனவே தக்கவைத்துக் கொண்ட அன்ட்ரே ரஸ்ஸல், சுனில் நைரன், வெங்கடேஷ் ஐயர் மற்றும் வருண் சக்கரவர்த்தி என்ற நால்வருடன் மீண்டும் பட் கம்மின்ஸ், சிவம் மாவி, நிதீஷ் ரானா, ரிங்கு சிங் மற்றும் ரிம் சவுத்தி ஆகியோரை ஏலத்தில் எடுத்து தங்களுக்கான அடித்தளத்தை உருவாக்கினர். புதிதாக அஜின்கே ரகானே மற்றும் இங்கிலாந்தின் அலெக்ஸ் கேல் யை ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஸ்தானத்திற்கும் சாம் பில்லிங்ஸ், பாபா இந்திரஜித், சில்ட்ரன் ஜாக்சன் என்ற விக்கெட் காப்பாளர்களை மத்திய வரிசைக்கும் தேர்வு செய்து

**KOLKATA KNIGHT RIDERS**

PURSE SPENT 89.55 cr | PURSE AVAILABLE 0.45 cr

| NAME | TYPE | COST ₹ (lakhs) | COST $(000) |
|---|---|---|---|
| Anukul Roy | AR | 20 | 26 |
| Shivam Mavi | AR | 725 | 966 |
| Abhijeet Tomar | BAT | 40 | 53 |
| Pratham Singh | BAT | 20 | 26 |
| Varun Chakravarthy ★ | AR | 800 | 1066 |
| Rasikh Salam | BOW | 20 | 26 |
| Aman Khan | AR | 20 | 26 |
| Ramesh Kumar | BAT | 20 | 26 |
| Ashok Sharma | BOW | 55 | 73 |
| Sunil Narine ✈ ★ | BOW | 600 | 800 |
| Tim Southee ✈ | BOW | 150 | 200 |
| Sheldon Jackson | BAT/WK | 60 | 80 |
| Alex Hales ✈ | BAT | 150 | 200 |
| Mohammad Nabi ✈ | AR | 100 | 133 |
| Andre Russell ✈ ★ | AR | 1200 | 1600 |
| Ajinkya Rahane | BAT | 100 | 133 |
| Sam Billings ✈ | BAT/WK | 200 | 266 |
| Umesh Yadav | BOW | 200 | 266 |
| Baba Indrajith | BAT/WK | 20 | 26 |
| Pat Cummins ✈ | AR | 725 | 966 |
| Nitish Rana | AR | 800 | 1066 |
| Chamika Karunaratne ✈ | AR | 50 | 66 |
| Shreyas Iyer | BAT | 1225 | 1633 |
| Rinku Singh | BAT | 55 | 73 |
| Venkatesh Iyer ★ | AR | 800 | 1066 |

✈ OVERSEAS PLAYER ★ RETAINED PLAYER PRE-AUCTION PICKS USD 1 = INR 75 approx

வாங்கியுள்ளனர். இவர்களை விடுத்து இலங்கையின் சமிக்க கருணாரட்ன, ஆப்கானிஸ்தானின் மொகமட் நபி, உமேஷ் யாதவ் மற்றும் சில உள்ளூர் வீரர்களை எடுத்திருந்தாலும் அணியின் சம நிலையை பேண ஒரு தரமான உள்ளூர் மத்திய வீரர் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் இல்லாத நிலை ஏற்பட்ட வாய்ப்பு இருக்கிறது. மத்திய வீரர் இன்மையை நைரன் மற்றும் ரஸ்ஸல் கொண்டு சமாளித்தாலும் ஒரு தரமான உள்ளூர் வேகப்பந்து வீச்சாளர் இல்லாமை அணியின் சமநிலையை குலைக்கும்.

## டெல்லி கேப்பிட்டல்ஸ்

முதல் நாள் ஏலத்தில் சிறப்பாக செயற்பட்டு இருந்தாலும் இரண்டாம் நாள் சில தவறுகளை விட்டது, டேவிட் வார்னர், மிட்செல் மார்ஷ், அன்ரிச் நொக்கியா, முஸ்ரபிக்கூர் ரஹ்மான் ஆகியோருக்கு சரியான பதில் வீரர்களை எடுப்பதில் சிக்கலை கொடுத்தது. இறுதியில் பொல்லார்ட்/ரஸ்ஸல் போன்று விளையாடக் கூடிய ரவ்மான் பவல், ரிம் செய்வேட் மற்றும் லுங்கி நிகிடி ஆகியோரை எடுத்தாலும் இன்னொரு வெளிநாட்டு வீரரை எடுக்க பணம் இல்லாமல் தவித்தனர். டெல்லிக்கு



DELHI CAPITALS

PURSE SPENT 89.90 cr | PURSE AVAILABLE 0.10 cr

| NAME | TYPE | COST ₹ (lakhs) | COST $(000) |
|---|---|---|---|
| Prithvi Shaw ★ | BAT | 750 | 1000 |
| Kamlesh Nagarkoti | AR | 110 | 146 |
| Chetan Sakariya | BOW | 420 | 560 |
| Ripal Patel | AR | 20 | 26 |
| Yash Dhull | AR | 50 | 66 |
| Vicky Ostwal | AR | 20 | 26 |
| David Warner ✈ | BAT | 625 | 833 |
| Mitchell Marsh ✈ | AR | 650 | 866 |
| Mustafizur Rahman ✈ | BOW | 200 | 266 |
| Mandeep Singh | BAT | 110 | 146 |
| Shardul Thakur | BOW | 1075 | 1433 |
| Anrich Nortje ✈ ★ | BOW | 650 | 866 |
| KS Bharat | BAT/WK | 200 | 266 |
| Lungi Ngidi ✈ | BOW | 50 | 66 |
| Axar Patel ★ | AR | 900 | 1200 |
| Kuldeep Yadav | BOW | 200 | 266 |
| Tim Seifert ✈ | BAT/WK | 50 | 66 |
| Sarfaraz Khan | AR | 20 | 26 |
| Praveen Dubey | AR | 50 | 66 |
| Ashwin Hebbar | BAT | 20 | 26 |
| Rovman Powell ✈ | BAT | 280 | 373 |
| Lalit Yadav | AR | 65 | 86 |
| Rishabh Pant ★ | BAT/WK | 1600 | 2133 |
| Khaleel Ahmed | BOW | 525 | 700 |

✈ OVERSEAS PLAYER ★ RETAINED PLAYER ⋰ PRE-AUCTION PICKS USD 1 = INR 75 approx

கடந்த ஆண்டுகளில், பதினொருவர் அணியில் தொடர்ந்து இடம்பெற்று விளையாடிவர்களில் தக்கவைத்துக் கொண்ட நால்வர் தவிர்த்து மற்றைய ஏழுவரையும் இழந்து இருந்தாலும் பிரித்வி ஷா, டேவிட் வார்னர், மிட்செல் மார்ஷ், ரிசாப் பன்ட், மன்டீப் சிங்/சப்ராஸ் கான்/ ரிப்பல் பட்டேல்/ லலித் யாதவ், ரவ்மான் பவல், அக்சர் பட்டேல், சார்துல் தாகூர், குல்தீப் யாதவ், அன்ரிச் நொக்கியா, கலீல் அகமட்/சேட்டன் சக்கரியா என்று பலமான ஒரு பதினொருவர் அணியை கட்டமைத்திருக்கிறார்கள்.

அத்தோடு கமலேஷ் நாகர்கோடி, பிரவீன் டூபே, அஸ்வின் ஹப்பர் மற்றும் தற்போது நிறைவடைந்த இளையோர் உலகக்கிண்ணப் போட்டிகளில் வழி நடாத்தி கிண்ணம் வென்ற யஸ் டூல் என இளம் வீரர்களையும் எடுத்துள்ளார்கள்.

கடந்த ஆண்டுகளில் ரிசப் பண்ட் க்கு மாற்று விக்கெட் கீப்பராக உள்ளூர் வீரர் இல்லாமல் தவித்த நிலையில் இம்முறை கே.எஸ் பரத் இனை ஏலத்தில் எடுத்து அக்குறையும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரர்

அணித்தலைவர் பதவியில் இருந்து விராட் கோலி விலகிய நிலையில் கோஹ்லி, கிளென் மக்ஸ்வெல், முகமத் சிராஜ் ஆகியோரை தக்க வைத்திருந்தது பெங்களூர். ஏலத்தில் மீண்டும் இலங்கையின் வானித்து ஹசரங்க, ஹர்ஷல் படேல், ஷாபாஸ் அஹ்மத், நியூசிலாந்தின் பின் ஆலன் மற்றும் சூயஸ் பிரபுதேசை ஆகியோரையும் புதிதாக தென்னாபிரிக்காவின் பாப் டு பிளெஸ்ஸிஸ், தினேஷ் கார்த்திக், ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹசல்வுட், அனுஜ் ராவத்



**ROYAL CHALLENGERS BANGALORE**

PURSE SPENT 88.45 cr | PURSE AVAILABLE 1.55 cr

| NAME | TYPE | COST ₹ (lakhs) | COST $(000) |
|---|---|---|---|
| Suyash Prabhudessai | AR | 30 | 40 |
| Anuj Rawat | BAT/WK | 340 | 453 |
| Luvnith Sisodia | BAT/WK | 20 | 26 |
| Shahbaz Ahmed | AR | 240 | 320 |
| Akash Deep | BOW | 20 | 26 |
| Aneeshwar Gautam | AR | 20 | 26 |
| Virat Kohli | BAT | 1500 | 2000 |
| Jason Behrendorff | BOW | 75 | 100 |
| Josh Hazlewood | BOW | 775 | 1033 |
| Dinesh Karthik | BAT/WK | 550 | 733 |
| Karn Sharma | BOW | 50 | 66 |
| David Willey | AR | 200 | 266 |
| Glenn Maxwell | AR | 1100 | 1466 |
| Siddarth Kaul | BOW | 75 | 100 |
| Harshal Patel | AR | 1075 | 1433 |
| Faf du Plessis | BAT | 700 | 933 |
| Chama Milind | BOW | 25 | 33 |
| Wanindu Hasaranga | AR | 1075 | 1433 |
| Mahipal Lomror | AR | 95 | 126 |
| Sherfane Rutherford | AR | 100 | 133 |
| Mohammed Siraj | BOW | 700 | 933 |
| Finn Allen | BAT | 80 | 106 |

என பலரையும் எடுத்துள்ளனர். துடுப்பாட்டத்தில் கேஜிஎப் **('K'ohli, 'G'lenn Maxwell, 'F'af du Plessis)** கூட்டணி போடும் அடித்தளத்துக்கு தினேஷ் கார்த்திக் என்ற தரமான போட்டியை முடித்துக் கொடுக்கும் பினிஷெர் கிடைத்துள்ளார். இவர்களுக்கு இடையில் இரு இந்திய இளம் வீரர்கள் மூன்றாம் மற்றும் ஐந்தாம் இடத்தில் ஆடமுடியும். சகல துறை வீரர்களாக ஹசரங்க மற்றும் அஹ்மத் உடன் ஹசல்வுட், சிராஜ், ஹர்ஷல் படேல் என்ற வேகப் பந்து கூட்டணி அமைந்து இருக்கிறது. வெளிநாடு வீரர்களுக்கு தரமான மாற்று வீரர்களாக டேவிட் வில்லி, ஷ ான் ரதர்போர்ட், பின் ஆலன், மற்றும் ஜேசன் பெஹ்ரேன்ட்ராப் உள்ளனர். கரன் சர்மா, சித்தார்த் கவுல்,

ராவத் என இந்திய வீரர்களுக்கும் மாற்று வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மும்பை இந்தியன்ஸ்

முதல் நாள் மந்தமாக இருந்து தங்களுக்கு தேவையான இரைகளை இறுதியில் எடுத்துக் கொண்டது மும்பை என்று தான் சொல்ல வேண்டும். நான்கு வீரர்களை மட்டும் தக்க வைக்க முடியும் என்பதால் ரோஹித் சர்மா, சூரியகுமார் யாதவ், கிரேன் பொல்லார்ட் மற்றும் ஜஸ்பிரிட் பும்ராஹ் ஆகியோரை தக்க

**MUMBAI INDIANS**

PURSE SPENT 89.90 cr | PURSE AVAILABLE 0.10 cr

| NAME | TYPE | COST ₹ (lakhs) | COST $(000) |
|---|---|---|---|
| Sanjay Yadav | AR | 50 | 66 |
| Dewald Brevis ✈ | BAT | 300 | 400 |
| Ramandeep Singh | AR | 20 | 26 |
| Mayank Markande | BOW | 65 | 86 |
| Aryan Juyal | BAT/WK | 20 | 26 |
| Arjun Tendulkar | AR | 30 | 40 |
| Tilak Varma | AR | 170 | 226 |
| Hrithik Shokeen | AR | 20 | 26 |
| Rahul Buddhi | BAT | 20 | 26 |
| Arshad Khan | AR | 20 | 26 |
| Kieron Pollard ✈ ★ | AR | 600 | 800 |
| Rohit Sharma ★ | BAT | 1600 | 2133 |
| Jaydev Unadkat | BOW | 130 | 173 |
| Suryakumar Yadav ★ | BAT | 800 | 1066 |
| Tymal Mills ✈ | BOW | 150 | 200 |
| M Ashwin | BOW | 160 | 213 |
| Jasprit Bumrah ★ | BOW | 1200 | 1600 |
| Jofra Archer ✈ | AR | 800 | 1066 |
| Fabian Allen ✈ | AR | 75 | 100 |
| Ishan Kishan | BAT/WK | 1525 | 2033 |
| Basil Thampi | BOW | 30 | 40 |
| Daniel Sams ✈ | AR | 260 | 346 |
| Anmolpreet Singh | BAT | 20 | 26 |
| Tim David ✈ | AR | 825 | 1100 |
| Riley Meredith ✈ | BOW | 100 | 133 |

✈ OVERSEAS PLAYER ★ RETAINED PLAYER ⤏ PRE-AUCTION PICKS USD 1 = INR 75 approx



வைத்திருந்த நிலையில் இஷான் கிஷன் க்கு, தாங்கள் இதுவரை எந்த ஒரு ஐபில் ஏலத்திலும் கொடுக்காத தொகையை கொடுத்து வாங்கியது. இது இந்த ஐபில் இல் ஒருவருக்கு கொடுக்கப்பட்ட மிகக் கூடிய தொகையும் ஆகும். இவ்வாண்டு ஜல்ரா ஆர்ச்சர் விளையாட மாட்டார் என்றாலும் ஆர்ச்சரையும் எடுத்து பும்ராஹ்-ஆர்ச்சர் கூட்டணியை அடுத்த ஆண்டிற்கு உருவாக்கி கொண்டது.

ரோஹித், கிஷான், யாதவ், திலக் வர்மா, பொல்லார்ட், டிம் டேவிட் , டேனியல் சாம்ஸ்/ பாபியன் ஆலன், ஜெயதேவ் உனட்கட், மயங் மார்கண்டே/ முருகன் அஸ்வின், டிமால் மில்ஸ் என்று நல்ல தொடக்க பதினொருவர் அணி அமைந்து இருக்கிறது. இவ்வருட இளையோர் உலக கிண்ணத்தில் கலக்கிய, குட்டி ஏபி டீ வில்லியர்ஸ் என்று அழைக்கப்படும் தென்னாபிரிக்காவின் டெவல்ட் ப்ரேவிஸ் இனை எடுத்து இருப்பதும் மும்பை தான்.

***மற்றைய 5 அணிகளைப்பற்றியும் அடுத்த இதழில் அலசுவோம்.***